GOKULAM

கோகுலம்

திருநெல்வேலி
மாணவர் ஸ்பெஷல்



"இன்னும் கொஞ்சம் வளையல் வேணும்மா!"

ரூ.6/-

ஜூலை 2003

“உங்களுக்குள் ஒளிந்திருக்கும் மேதையை அறிந்து கொள்ளுங்கள்.”

உங்கள் குழந்தையின் துல்லியத்தையும் துரிதத்தையும் எமது மனக்கணித பயிற்சி மேம்படுத்துகிறது.

மூன்றாவது தேசிய அபாகஸ் மற்றும் மனக்கணித போட்டி

நாள் : 23.08.2003
இடம் : விஜயா ஷேஷமஹால்
விஜயா ராணிமஹால்
சென்னை.

UCMAS
Mental Arithmetic-India

உலகத்தின் தலைசிறந்த தத்துவம் தற்போது இந்தியாவில்
அபாகஸ் மூலம் மனக்கணித பயிற்சி
முழு மூளை மேம்பாட்டிற்கு
4-12 வயது குழந்தைகளுக்காக

பயிற்சியினால் மேம்படுத்தப்படும்

- வேகம்
- துல்லியம்
- கற்றுக் கொள்ளும் திறன்
- ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனை
- கவனிக்கும் திறன்
- பிம்ப நினைவுத் திறன்

யூசிமாஸ் - அபாகஸ் மனக்கணித கல்வியில் இந்தியாவில் முன்னோடி



யூசிமாஸ் மையங்கள்

சென்னை	64
தமிழ்நாடு	94
கர்னாடகா	26
கேரளா	11
பாண்டி	03
டெல்லி	02
ஒரிஸா	02
மத்திய பிரதேசம்	01

Master Franchises

மஹாராஷ்ட்ரா & கோவா (022) 26202675
குஜராத் 0265-251692
ஆந்திர பிரதேசம் 0891-2703521
உத்திர பிரதேசம் 0522-2377745
பஞ்சாப் & அரியானா 0172-879272

இந்தியாவில் 250 மையங்களில் சென்னையில் மட்டுமே 64க்கும் மேற்பட்ட மையங்கள்

மேலும் விபரங்களுக்கு

யூசிமாஸ் மென்டல் அரித்மெடிக் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்,
A1-1857, 13-வது மெயின் ரோடு, 6-வது அவென்யூ, அண்ணாநகர் (மேற்கு) சென்னை - 600 040. இந்தியா.
Tel : 91-44 -2618 0468 / 2396 / 4083 / 6427/ 6428. Fax : 91-44 -2618 0143 / 1706
E-mail : admin@ucmasindia.com Website : www.ucmasindia.com

We welcome franchise enquiry from allover India

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-


**Bharathan Publications
Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்

ஜூலை 2003 மலர் : 21 இதழ் : 6

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.




"கஞ்சன்னா யாருப்பா?"
"காசையே கண்ணில் காட்டாதவன்."
"காசுன்னா என்னப்பா?"

- ஆர். மனோஜ்குமார்,
அரவக்குறிச்சிப்பட்டி

கொஞ்சம் சிரிங்க..

"இடுக்கண் வரும்போது நகுக..."
"சார், நமக்கு வரும்போதா, அடுத்தவர்களுக்கு வரும்போதா?"

- எம். அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி



"ராமு! சோழபுரி எங்கே உள்ளது?"
"ஆரியபவனில்"
"என்னடா உளர்றே?"
"சாரிடா, என் காதில் 'சோலா பூரி'ன்னு விழுந்தது!

- பி.ஆர். பார்த்தசாரதி,
ஸ்ரீரங்கம்





"உங்க அண்ணன் என்ன பண்றாரு?"
"ஊர்ல விவசாயம் பார்க்கிறார்."
"அப்படியா! நல்ல வருமானம் கிடைக்குமே?"
"நீ வேறடா! ஊர்ல எல்லாரும் விவசாயம் பார்க்கிறாங்க. அதைப் பார்த்துக்கிட்டு சும்மா இருக்கார்!"

- பு. வீரமணி,
ஒன்பதாம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி, நல்லூர்.



ஆசை... ஆசை...

கஷ்டப்பட்டுப் பணம் சேர்த்துக் கொண்டு கப்பல் பயணத்துக்கான பணத்தைச் செலுத்தி மளிகை சாமான்களோடு புறப்பட்டான் புண்ணியகோடி. மனைவியிடம், "பத்திரமாகக் குழந்தைகளைப் பார்த்துக் கொள். நான் திரும்பி வரத் தாமதமானால் மனம் தளராதே! எந்தெந்த நாட்டில் எதெதற்கு கிராக்கியோ அதை விற்று நிறையப் பணம் சம்பாதித்துக் கொண்டு வருகிறேன்" என்று ஆறுதல் கூறிச் சென்றான்.

சமைத்து சாப்பிட சில பாத்திரங்களும், சிறியதாக ஓர் ஆட்டுரலும்கூட எடுத்துக் கொண்டான். ஒரு வாரம் பயணம் செய்த பின் மழையும், புயலும் அலைக் கழித்தது.

கப்பலை ஒரு தீவில் நிறுத்தினான் மாலுமி. பயணிகள் தீவில் இறங்கி சுற்றிப் பார்த்தனர். அந்தத் தீவு மிகச் சிறியது. ஆனால் பூக்கள், காய்கள், பழங்கள் என்று எல்லாமே இருந்தன. மலைவாழ் பெண்கள் அம்மானை ஆடிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய கற்களைப் பார்த்த புண்ணியகோடி ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தான்.

அத்தனையும் வைர, மரகதக் கற்கள்! மெதுவாக நெருங்கினான். முறைத்தனர். பின்னர் கற்களையும் எடுத்துக் கொண்டு ஓடி விட்டனர். உடன் வந்தவர்கள், "இங்கு ரத்தினங்கள் ஏராளமாய் கிடைக்கும். ஆனால் தொட விட மாட்டார்கள். ஆளுக்கு ஒரு பெரிய கத்தியோடுதான் அலைவார்கள்! பாஷையும் புரியாது. முரட்டு ஜனங்கள்! வந்து விடுங்கள்"

என்றனர்.

ஆனால் புண்ணியகோடி அங்கே தங்க முடிவு செய்தான். மழையும் புயலும் ஓய்ந்து கப்பல் புறப்படும்போது தன் சாமான்களை அங்கே இறக்கிக் கொண்டான். எவர் பேச்சும் அவன் செவியில் ஏறவில்லை!


மூன்று கற்களை வைத்து, சுள்ளிகளைப் பொறுக்கி வந்து தீ மூட்டினான். கமகம வாசனையுடன் சமையல் செய்தான். பெருங்காய மணமும், வெல்லப் பாகு வாசமும் அந்தத் தீவின் மனிதர்களை அங்கே கூட்டிவிட்டது.

தலைவனைப் போலிருந்தவன் ஜாடை காட்டி கொஞ்சம் தரும்படி கேட்டான். புண்ணியகோடி அம்மானை ஆடிய பெண்களை அடையாளம் கண்டு, அவர்களைப் போல் ஆடிக்காட்டி, அந்தக் கற்கள் வேண்டும் என்றான்.

அவனிடம் ஒரு வைரக்கல்லும், மரகதக் கல்லும் கொடுத்தான் தலைவன். கொஞ்சம் சாதம் போட்டு சாம்பார் விட்டுப் பிசைந்து தந்தான் புண்ணியகோடி. தலைவனோடு நாலைந்து பேர் ருசி பார்க்க, அவர்கள் சப்புக் கொட்டுவதையும், கண்கள் விரிவதையும் கண்டு மற்றவர்கள் ஆவலாய் பறந்தனர். புண்ணியகோடி விதவிதமாய் சமைத்தான். ரசம் சாதம், புளியோதரை, சர்க்கரைப் பொங்கல் என்று ஒரு கவளத்துக்கு ஒரு ரத்தினம் வீதம் சம்பாதித்து பத்திரப் படுத்தினான்.

அடேயப்பா! ஊருக்குப் போய் எல்லாவற்றையும் விற்று வீடு, தோட்டம் என்று வாங்கி கோடீஸ்வரனாகி விடலாமென மகிழ்ந்தான். இராத்திரி நேரத்தில் ஏதாவது கப்பல் தென்படுகிறதா என்று கடற்கரையில் போய் நிற்பான்.

மளிகை சாமான்கள் வேக



மாகக் கரைந்தன. சீக்கிரம் தப்பி விட வேண்டும் என்று தீர்மானித்தான்.


அன்றைக்கு ரசம் சாதமும், பொங் கலும் பண்ணியிருந்தான். பொங் கலையே எல்லோரும் விரும்பியதால் ரசம் நிறைய மீதமாகி விட்டது. மிஞ்சிய ரசத்தையும் விடவில்லை. குவளை குவளையாக முகர்ந்து குடித்தார்கள்.


அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த புண்ணியகோடி கூக்குரல் கேட்டு விழித் தான். தலைவன் தடுத்திராவிட்டால் புண்ணியகோடி அடிபட்டே செத்திருப் பான்.

ரசத்தையும், பாயசத்தையும் அள வுக்கு மீறிக் குடித்த சிலர் பேதியாகி சுருண்டிருந்தனர். 'மருந்து கொடு' என்று மிரட்டினான் தலைவன். நல்லவேளை யாக ஆபத்துக்கு உதவும் என்று தலைவலி, காய்ச்சல், வாந்தி, பேதி எல்லாவற்றுக்கும் மருந்து கொண்டு வந்திருந்தான் புண்ணியகோடி. பேதி மருந்தைக் கொடுத்ததோடு பெரிய மண் பானையில் பார்லி கஞ்சியும் போட்டான்.

புரியாத ஜனங்கள் அதையும் முகர்ந்து குடித்தனர். பேதி யானவர்களுக்குப் போதாமல் போய் விடப் போகிறதே என்று புண்ணியகோடி தடுக்கக் கோபம் கொண்ட ஒரு மலைவாசி அவனது மூட்டைகளைத் தூக்கி கிடுகிடு பள்ளத்தில் வீசினான்.

ரத்தினக் கற்கள் கொண்ட மூட்டை வேகமாக உருண்டு கண்ணிலிருந்து மறைந்ததைப் பரிதாபமாகப் பார்த்தான் புண் ணியகோடி. தூரத்தில் கப்பல் ஒன்று வருவது தெரிய, புண் ணியகோடி உயிர் பிழைத்தால் போதும் என்ற எண்ணத்துடன் கப்பலின் வரவை எதிர் பார்த்துக் காத்திருந் தான்.





சூரியன் எங்கே போகிறது?

வழக்கம்போல, முதலில் கொஞ்சம் ஜோக்ஸ் படித்து சிரிக்கலாமா?

ஒரு குண்டான இளைஞன் டாக்டரிடம் வந்து, தான் எடையைக் குறைக்க ஆசைப்படுவதாகவும், அதே சமயம், நீச்சல், ஓட்டம் போன்ற உடற்பயிற்சிகள் செய்ய இஷ்டமில்லை. வேறு ஏதாவது ரொம்ப எளிமையான முறை இருக்கிறதா? என்றும் கேட்டான்.

சிறிது நேரம் யோசித்த டாக்டர், "என் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் சொல்லிக் கொடுத்த மிக எளிய உடற்பயிற்சியைச் சொல்லித் தரட்டுமா?" என்று கேட்க, அந்த இளைஞன் சந்தோஷமாய்த் தலையை ஆட்டினான்.

தன் தலையை இடது புறமும், வலது புறமும் லேசாக ஆட்டிக்காட்டி, "இதுதான் உடற்பயிற்சி, இதைத் தினமும் செய்தால் போதும்" என்றார் டாக்டர்.

"அட! இவ்வளவு எளிய உடற்பயிற்சியா?" என்று வியந்த இளைஞன், "தினம் இப்படி எத்தனை தடவை செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

"யார் எப்போது எதைச் சாப்பிடக் கொடுத்தாலும், சாப்பாட்டு நேரம் தவிர்த்த மற்ற சமயங்களில் இந்த உடற்பயிற்சியைச் சில தடவைகள் செய்தால் போதும்! உடல் எடை தானாகக் குறைந்து விடும்" என்று சொன்னார்.

உணவுக் கட்டுப்பாடு வேண்டும். கண்ட நேரத்திலும் எதை

யாவது கொறித்துக் கொண்டே இருக்கக் கூடாது என்பதை எத்தனை புத்தி சாலித்தனமாய் சொல்லிவிட்டார் பார்த்தீர்களா?

ஒரு சவ ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. சாலையில் சென்று கொண்டிருந்த ஒருவர், சவ ஊர்வலத்தில் கலந்து கொண்ட இன்னொருவரிடம் கேட்டார் : "இறந்தது யார்?"

கிண்டல் பேர்வழியான அவர் சொன்ன பதில், "சவப் பெட்டிக்குள் இருக்கிறாரே அவர்தான்!"

ஆசிரியர் : இரவு நேரத்தில் சூரியன் எங்கே போகிறது?

மாணவன் : எங்கும் போகவில்லை. அதன் இடத்திலேயே தான் இருக்கிறது. இருட்டில் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை, அவ்வளவுதான்!



எண்கள் குறித்து சில விசித்திரமான தகவல்களைத் தெரிந்து கொள்ளலாமா?

* சமம் என்பதைக் குறிக்க = என்ற குறியீட்டைப் பயன்படுத்துகிறோமில்லையா? இந்தக் குறியீட்டை ராபர்ட் ரெக்கார்டே என்கிற கணித அறிஞர் 1557ல் கண்டுபிடித்தார்.

* பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் ஃபிரெஞ்சு விஞ்ஞானிகள் மெட்ரிக் முறையைக் கண்டுபிடித்தனர்.

* கூகொல் என்றால் என்ன தெரியுமா? ஒன்று என்கிற எண்ணைத் தொடர்ந்து நூறு பூஜ்ஜியங்கள் போட்டால் கிடைக்கும் எண்தான்.

இந்த எளிய புதிருக்கு விடை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

ஒ. இ. மூ. நா. ஐ. ஆ... இந்த வரிசையில் அடுத்து வரும் எழுத்து என்ன என்று சொல்லுங்கள்.

என்ன தெரியலையா? ரொம்ப சிம்பிள் இது! ஒன்று, இரண்டு... மூன்று, இப்படி வரிசையாய் முதல் எழுத்துகள் மட்டும் இங்கே உள்ளன. இந்த வரிசைப்படி பார்த்தால், 'ஆறு'க்கு அப்புறம் ஏழு ஆக, 'ஏ'தான் வரும்.

கொறிக்கக் கொஞ்சம் தகவல் சிப்ஸ்.

* உலகில் அதிகம் பேர் அவதிப்படும் நோய் பல் சொத்தையாவதுதான்.

* நம் கல்லீரல், இதயத்தைவிட ஐந்து மடங்கு எடை உள்ளது.

* பிறந்த குழந்தைகள், மூன்று மாதக் காலத்துக்கு, அழுதாலும் கண்களில் கண்ணீர் வராது.


* தலைமுடியைக் கயிறாகத் திரித்தால், அது ஒரு மோட்டார் காரைக் கட்டி இழுக்கும் அளவுக்கு உறுதியாக இருக்கும்.

* 'கொட்டாவி' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாலும் சரி, கொட்டாவி என்ற வார்த்தையைப் படித்தாலும் சரி கொட்டாவி வரும் என்கிறார்கள் டாக்டர்கள்.

* கைகளில் உள்ள நடுவிரல் நகம், கட்டைவிரல் நகத்தைவிட வேகமாக வளருகிறது.

உங்களுக்கு மட்டும்தான் கூல்டிரிங் குடிக்கப் பிடிக்குமா? இதோ இந்த அணிலுக்குக் கூட கூல்டிரிங் குடிக்கப் பிடிக்குமாம். நெட்டில் சிக்கின போட்டோ இது!

- எஸ். சந்திரமௌலி


சொர்க்கம் செல்ல வேண்டும்!
கதை : பொறையாறு காமேதா
படம் : மகேஸ்
சூரக்கோட்டையை வீரதீரன் ஆண்டு வந்தான். ஒரு நாள்-
அமைச்சரே, என்னைப் போல் சிறந்த அரசன் யாருமே இருக்க முடியாது, இல்லையா?
சே! என்ன ஒரு தற்பெருமை!
ஆம் மன்னா!
அமைச்சரே, நம் நாட்டுக்கு வந்திருக்கும் சாமியார் உண்மையிலேயே சக்தி வாய்ந்தவரா?
ஆமாம் அரசே!
உடனே சாமியாரின் குடிலை அடைந்தான் வீரதீரன். சாமியார் தியானத்தில் இருந்தார்.
நான் மன்னன் வந்திருக்கிறேன்... இந்நாட்டின் அரசன் வந்திருக்கிறேன்...
கண் திறந்த சாமியார் -
நீ யார்? என்ன வேண்டும்?
நான்தான் வேந்தன் வந்திருக்கிறேன் என்றேனே! நான் சொர்க்கம் செல்ல வேண்டும்.
அப்படியா! அதற்கு நான் சாக வேண்டும்.
என்னது! புரியலையே!
சாமியார் மீண்டும் தியானத்தில் மூழ்கினார்.
மன்னன் அமைச்சரிடம் நடந்ததைக் கூறி விளக்கம் கேட்டான்.
உங்களுக்கு 'நான்' என்ற ஆணவம் அழிய வேண்டும். அது அழிந்தால்தான் சொர்க்கம் செல்ல முடியும் என்ற பொருளில் 'நான்' சாக வேண்டும் என்றிருக்கிறார் அரசே!
புரிந்தது அமைச்சரே!

வளை ஓசை கலகலவென...

நாம் விரும்பி அணியும் முக்கியமான ஆபரணங்களில் வளையலும் ஒன்று. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அணியும் ஆபரணம் வளையல்களே!

வளையல் அணியும் வழக்கம் இன்று நேற்று தோன்றிய தல்ல. சிந்துச் சமவெளி நாகரிகம் தொடங்கி இன்று வரை அணியப்படும் ஒரு கலாசார அடையாளம் வளையல். மிகப் பழமையான அணிகலனாகிய வளையல் அந்தக் காலத்தி லிருந்து இந்தக் காலம் வரை பெண்களால் மட்டுமின்றி ஆண்களாலும் அணியப்பட்டு வருகிறது.

இதற்கான சான்றுகள் ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட டெர்ரகோட்டா சிற்பங்களில் கிடைத்திருக்கிறது. கைகளில் மட்டுமின்றி புஜத்திலும், தலைமுடியிலும், இடுப்பிலும், கால்களில் கூட வளையல்களை அணிந்திருக்கிறார்கள்.





அந்தக் காலத்தில் வளையல்கள் சமூக மதிப்பைக் காட்டும் அடையாளமாக இருந்திருக்கிறது. சிந்துச் சமவெளி நகரங்களில் பொது மக்கள் களி மண்ணாலான எளிமையான வளையல்களை அணிந்திருக்கின்றனர். வசதி படைத்தவர்கள் வெண்கலம் மற்றும் தங்கத்திலான வளையல்களை அணிந்துள்ளனர்.

மண், உலோகங்கள், கண்ணாடி மட்டுமின்றி சிப்பி, மரம், தேங்காய் ஓடு, மிருகக் கொம்புகள், எலும்புகளில்கூட வளையல்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

வளையல்கள் அழகான ஆபரணம். இதற்கு கலாசார, சமூக, மதரீதியான காரணங்கள் கூட உண்டு.

திருவண்ணாமலை மாவட்டச் சிறப்பிதழ்

ஆகஸ்ட் இதழ் திருவண்ணாமலை மாவட்டச் சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது.


அடுத்தது கோவை மாவட்டச் சிறப்பிதழ்

கோவை மாவட்ட பள்ளி மாணவ, மாணவியர் இப்பொழுதே தங்களின் படைப்புகளை அனுப்ப ஆரம்பிக்கலாம். கதைகள், கவிதைகள், துணுக்குகள், ஜோக்ஸ், புதிர்கள், அனுபவங்களை எழுதி அனுப்பலாம். இது தவிர கோவை மாவட்டத்தின் சிறப்புகள் வரலாற்று அம்சங்களையும் எழுதலாம். கடைசித் தேதி 15.7.2003. பிரசுரமானால் பரிசு உண்டு.

சீனாவில் உள்ள டியென்ட்ஸின் பகுதியில் 1969ம் ஆண்டு ஜூலை மாதம் 18ம் தேதி ஒரு பூகம்பம் ஏற்பட்டது. இந்தப் பூகம்பம் ஏற்படவிருந்த சில மணி நேரத்திற்கு முன்னால் அந்தப் பகுதியில் இருந்த கோழிக்குஞ்சுகள் கூட்டிற்குள் செல்ல மறுத்தன. புலிகள் அமைதி இழந்து காணப்பட்டன. எருமைகள் சாப்பிட மறுத்தன. குதிரைகளும் ஆடுகளும் பரபரப்புடன் இங்குமங்கும் ஓட ஆரம்பித்தன.

இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து பார்த்ததில் பூகம்பம் ஏற்படப்போவதை முன் கூட்டியே அறிந்து கொள்ளும் சக்தி விலங்குகளுக்கு உள்ளது புலனாகிறது என்று ஸ்ரீவத்ஸவா தனது 'ஃபோர் காஸ்டிங் எர்த்குவாக்ஸ்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

- ஆர்.ஆர்.பூபதி, திண்டுக்கல்



ஆங்கிலத்தில் வளையல் 'பேங்கில்' என்று அழைக்கப்படுகிறது. இந்த வார்த்தை ஹிந்தியில் உள்ள 'பேங்ரி' என்ற வார்த்தையிலிருந்து தோன்றியுள்ளது. பேங்ரி என்றால் கை, கால்களில் அணியப்படும் வளையம் என்று பொருள்.

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்துக்கும் வளையல்கள் ரசனை மற்றும் செய்யப்படும் பொருட்களில் வித்தியாசப்படுகின்றன.

கல்கத்தாவில் சிவப்பு வண்ணத்தில் பவளத்தால் வளையல்கள் செய்து பரவலாக அணியப்படுகின்றன.

பஞ்சாபில் தந்தத்தாலான வளையல்கள் அணியப்பட்டன. தந்தம் தடை செய்யப்பட்டதும் அதேபோன்று பவளம் மற்றும் பிளாஸ்டிக்களில் வளையல்கள் அணியப்படுகின்றன.

குஜராத்தில் கர்ப்பிணி பெண்களுக்கு வெள்ளி மற்றும் சிப்பியிலான வளையல்கள் அணிவிக்கப்படுகின்றன. இதனால் குழந்தை சுலபமாகப் பிறக்கும் என்று நம்பப்படுகிறது.

தென்னிந்தியாவில் திருமணம் மற்றும் வளைகாப்பின்போது வளையல்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. கர்ப்பிணி பெண்களுக்கு ஒரு கையில் 21 வளையல்களும் மற்றொரு கையில் 22 வளையல்களும் பல வண்ணங்களில் போடப்படுகின்றன.

மகாராஷ்ட்ராவில் பச்சை வண்ண வளையல்கள் விசேஷங்களின்போது அணியப்படுகின்றன.

மத்தியப் பிரதேசத்தில் தேங்காய் ஓட்டினால் செய்யப்பட்ட வளையல்கள் பிரசித்தி பெற்றவை.

ஒவ்வொரு இடத்திலும் கிடைக்கக் கூடிய பொருட்களையும், ரசனையையும் கொண்டு வளையல்கள் வலம் வந்துள்ளன. காஷ்மீரில் மர வளையல்களும், அசாமில் காண்டா மிருகத்தின் கொம்பில் செய்யப்பட்ட வளையல்களும் இப்படிபட்டவையே!

கண்ணாடி வளையல்கள் பெரும்பாலும் முஸ்லீம் மக்களால் செய்யப்படுகின்றன.

சார்மினாரில் உள்ள லாட் பஜார் வளையல்களுக்கென பிரத்யேகமான பகுதி.


அட்டையில் : அம்மாவுடன் சுஸ்மா
வண்ணப்படம் : ஸ்ரீஹரி

விளையாட்டு அரங்கம்

ஆஸ்திரேலியா - மேற்கு இந்தியத் தீவுகளுக்கு இடையே 8 ஒரு தினப் போட்டிகள் நடைபெற்றன. இதில் முதல் 4 போட்டிகளிலும் வென்று 4 - 0 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா தொடரைக் கைப்பற்றிக் கொண்டது. அடுத்த 3 போட்டிகளில் மேற்கு இந்தியத் தீவுகள் அணி கடுமையாகப் போராடி ஆஸ்திரேலியாவை வென்றது. அடுத்தடுத்து ஆஸ்திரேலியா தோல்வி அடைந்தது எல்லோருக்கும் வியப்பை அளித்துள்ளது.



* ரிக்கி பாண்டிங்



* லாரா

"கடைசி மூன்று போட்டிகளில் தோற்றதன் மூலம், ஒரு நாள் தொடரைக் கைப்பற்றிய மகிழ்ச்சியே போய் விட்டது. இந்தத் தொடர் முழுவதும் நாங்கள் நன்றாகவே விளையாடினோம். ஆனால் இந்த ஒரு வாரத்தில் எங்கள் திறமையை இழந்துவிட்டோம். கடைசி மூன்று போட்டிகளில் எங்கள் உண்மையான திறமையை வெளிப்படுத்தவில்லை. முழுப் பெருமையும் மேற்கு இந்தியத் தீவுகள் அணியையே சாரும்" என்றார் ஆஸ்திரேலிய அணி கேப்டன் ரிக்கி பாண்டிங்.

மேற்கு இந்தியத் தீவுகள் கேப்டன் லாரா "முதல் நான்கு போட்டிகளை இழந்து, தொடரைப் பறி கொடுத்த பிறகு, நாங்கள் யார், எங்கள் திறமை என்ன என்பதை நிரூபித்திருக்கிறோம். கடைசி மூன்று போட்டிகளில் மிகவும் கடுமையாக உழைத்தோம். அதற்குக் கிடைத்த பலன் தான் அடுத்தடுத்த மூன்று வெற்றிகள். அணியின் உழைப்புக்குக் கிடைத்த வெற்றி" என்கிறார்.



* சச்சின்


பிரைஸ் வாட்டர் - ஹவுஸ் கூப்பர் நிறுவனம் கிரிக்கெட் போட்டியின் தர வரிசைப் பட்டியலை அறிவித்துள்ளது. டாப் டென் பேட்ஸ்மேன்களின் வரிசையில் முதல் இடத்தில் சச்சின் டெண்டுல்கர் இருக்கிறார். ஆஸ்திரேலியாவின் ரிக்கி பாண்டிங்கும், மேற்கு இந்தியத் தீவுகளின் ராம் நரேஷ் சர்வானும் இரண்டாம் இடத்தில் உள்ளனர். பத்தாவது இடத்தை வீரேந்தர் சேவக் பிடித்திருக்கிறார்.


டாப் டென் பந்து வீச்சாளர்களில் இலங்கையின் முத்தையா முரளிதரனும், தென் ஆப்பிரிக்காவின் ஷான் போலக்கும் முதல் இடத்தைப் பிடித்துள்ளனர். அதற்கு அடுத்த இடத்தில் ஆஸ்திரேலியாவின் கிளென் மெக்ராத் இருக்கிறார். இந்தியாவின் ஜாகீர்கான், ஹர் பஜன் சிங் ஆகியோர் 9வது, 10வது இடங்களைக் கைப்பற்றி இருக்கின்றனர்.

எட்டு கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள் வென்று, உலகின் முதல் நிலை டென்னிஸ் வீரராக உலா வருபவர் அமெரிக்காவின் ஆந்த்ரே அகாசி. பல பட்டங்கள் வென்றாலும் ஃபிரெஞ்ச் ஓபன் மட்டும் அவருக்குக் கடினமான விஷயமாகத் தானிருக்கிறது. கடந்த 11 ஆண்டுகளில் ஒரே ஒரு முறைதான் அவர் அரையிறுதிக்குள் நுழைந்திருக்கிறார். இந்த முறையும் காலிறுதியில் வெளியேறினார் அகாசி.


கூடா நட்பு!

கதை : என்.கோதண்டராமன்
படம் : சேகர்




மறுநாள் இரண்டும் மந்திர நீரைக் குடித்தன.
முயலே, நான் கிளம்பறேன். மாலை ஆறு மணிக்குள் திரும்பிடுவேன்.
சரி.
முயல் மெதுவாக நகர்ந்து உணவு தேட ஆரம்பித்தது. அப்போது -
ஐயோ... முயல் மாட்டப் போறது.
ஆஹா! இன்று நல்ல உணவு!
முயலே, சிறுத்தை வருது. ஓடு வேகமாக.
என்னால ஓட முடியலை, காப்பாற்று.
மான் முயலைக் கவ்விக் கொண்டு ஓடியது.
பாதுகாப்பான இடத்தை அடைந்தவுடன் மான் முயலிடம் காரணத்தைக் கேட்டு அறிந்தது.
முட்டாள் தனமா வாக்குக் கொடுக்கக் கூடாது. கூடா நட்பு, கேடாய் முடியும்.
நல்லா புரிஞ்சிக்கிட்டேன். நன்றி மான் அண்ணா.

மறக்க



ஸ்பூன்

என் தங்கை மினு எப்போதும் ஸ்பூனால் மட்டுமே சாப்பிடுவாள். எனவே சப்பாத்தி, தோசை போன்ற உணவுகளை, மிகவும் மெதுவாகக் கஷ்டப்பட்டுச் சாப்பிடுவாள். இதனால் கோபமடைந்த எங்கள் அம்மா, "மினு! எல்லாத்தையும் ஸ்பூனால் சாப்பிடக் கூடாது. கடவுள் எதுக்குக் கைகளைக் குடுத்திருக்காரு?" என்றார். உடனே மினு, "ஸ்பூனைப் பிடிக்கிறதுக்கு!" என்று கூற, அனைவரும் சிரித்து விட்டோம்.

- எம்.வினோத், சங்கரன்கோவில்

சார்ஸ்

வகுப்பாசிரியர் பொது அறிவுத் தேர்வு நடத்தினார். இங்கிலாந்தின் இளவரசர்



யார்? என்ற கேள்விக்கு ஒரு மாணவன் எழுதியிருந்த பதிலைப் படித்த ஆசிரியர் திகிலடைந்தார். காரணம், 'சார்லஸ்' என்பதற்கு அந்த மாணவன் 'சார்ஸ்' என்று எழுத்துப் பிழையாக எழுதியிருந்ததுதான். அதை அவர் வகுப்பில் சொல்ல அனைத்து மாணவர்களும் சிரித்துவிட்டோம்!

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்

நல்ல எண்ணெய்

நானும், என் அம்மாவும் கடைக்குச் சென்றிருந்தோம். என் அம்மா கடையில் கடலை எண்ணெய் கேட்டார். அத்துடன் நல்ல எண்ணெயாகத் தருமாறும் கேட்டுக் கொண்டார். குழம்பிப் போன கடைக்காரர் "உங்களுக்குத் தேவை கடலை எண்ணெயா? நல்லெண்ணெயா?" என்று திருப்பி கேட்டார். அவரது குழப்பத்தைப் புரிந்துக் கொண்ட என் அம்மா "கடலை எண்ணெய் தான் வேண்டும். அது நல்ல தரமான எண்ணெயாகக் கொடுங்கள்" என்று சொன்னார். கடைக்காரர் சிரித்த




படியே கொடுத்தார்.

- மு. சுகன்யா, ஆறாம் வகுப்பு,
சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி,
இராமநாதபுரம்.

எச்சம்

தமிழாசிரியரான என் அப்பா என் தம்பியிடம் "எச்சம் எத்தனை வகை? அவை யாவை?" என்று தமிழ் ஆண்டுத் தேர்வுக்கு முதல் நாள் கேட்டார். அவன் பதில் சொல்ல முயலும் முன், என் மாமா மகள் நிஷாந்தினி "பல்லி எச்சம், பறவை எச்சம்... என்று எச்சம் பலவகைப்படும்"




முடியவில்லை...

என்று கூறினாள். உடனே என் அப்பா "நம்ம நிஷாந்தினிகிட்டே மிச்ச கேள்விகளை நீயே கேட்டுப் படித்துக் கொள்" என்று தம்பியிடம் கூறிவிட்டார்.

- மு. மோசஸ் பிரவின் ஞானக்குமார், எட்டாம் வகுப்பு, சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி, இராமநாதபுரம்

கலக்கல்!

ஒரு முறை எங்கள் வீட்டிற்கு மாமா வந்திருந்தார். என் அப்பாவிடம் என்னைப் பற்றி "பையன் எப்படி இருக்கான்?" என்று விசாரித்தார். அதற்கு அப்பாவோ "அதை ஏன் கேட்கறீங்க, பையன் ஸ்கூல்ல ஓவியம் வரைஞ்சி கலக்கிகிட்டு இருக்கான்" என்றார் பெருமையாக! "அடடா! அப்ப பையனுக்கு ஓவியம் வரையிற முறை சரியாத் தெரியாதா?" என்று ஒரு குண்டை தூக்கிப் போட, நாங்கள் விழித்தோம். "பின்ன, பையன் ஓவியம்




வரைஞ்சி கலக்கிக்கிட்டு இருக்கான்னு சொன்னீங்களே. முறைப்படி வண்ணங்களைக் கலக்கிட்டுதானே ஓவியங்களை வரைவாங்க?" என்றதும் அவரது குறும்பை ரசித்தோம்.

- கே.மாரிதாஸ், மயிலாடுதுறை

ஜூஸ்

ஒரு நாள் மதியம் நானும் என் தோழியும் கடைக்குச் சென்றோம். என் தோழி ஒரு கடையில் ஜூஸ் வாங்கினாள். அப்பொழுது அவளின் மாமா அங்கு வரவே மேலும் ஒரு ஜூஸ் வாங்கினாள். அவள்



மாமாவிடம் "மாமா ஜூஸ்" என்றாள். அவர் "போமா லூஸ்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். எனவே அவள் அதிகமாக ஒரு ஜூஸ் வாங்கி, காசை லாஸ் ஆக்கி, லூஸ் என்ற பட்டமும் வாங்கியது சிரிப்பைத் தந்தது.

- சு. மலையரசி, கண்டவராயன்பட்டி

என் ஸ்டைல்!

அமைதியாக அறிவியல் பரீட்சை எழுதிக் கொண்டு இருந்தோம். எங்கள் தேர்வறையில் ரஜினி என்ற மாணவன் திரும்பி பார்த்ததால் ஆசிரியர் எச்சரிக்கை விடுத்தார். அதையும் கேட்காமல் மீண்டும் திரும்பிப் பார்த்தான் ரஜினி. ஆசிரியருக்குக் கோபம் வந்துவிட்டது. "டேய் ரஜினி! 'ஒரு தடவை சொன்னா நூறு தடவ சொன்னா மாதிரி' இது உன் டயலாக். 'நூறு தடவ சொன்னாலும் ஒரு தடவைக் கூட கேட்க மாட்டறே' இது என் டயலாக் காடா!" என்று சத்தமாகக் கூறினார். ஒன்றும் புரியாத ரஜினி, "ஆமாம் சார்" என்று கூறியது தான் தாமதம். தேர்வறையே சிரிப்பில் அதிர்ந்தது. தன் தவறை உணர்ந்த ரஜினி, ஆசிரியரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தேர்வு எழுதினான்.

- வே. சுபஸ்ரீ, பத்தாம் வகுப்பு, அ.மே.நி. பள்ளி, நல்லூர்.



எறும்பு போல இரு!




சிற்றெ றும்பு போல நீயும்
சுறு சுறுப்பாய் இயங்கணும்!
வரிசை யாக நின்று சென்று
விரைந்து செயல் ஆற்றணும்!

மாரிக் காலம் வந்த போது
மழை விடாமல் பெய்வதால்
தனது புற்றில் சேர்த்து வைத்துத்
தோதாய்ப் பிறகு உண்ணுது!

உழைக்கும் பருவம் தன்னில் சோம்பி
உண்டு மகிழ்ந்து வாழ்ந்திடில்
பிழைப்பு இன்றி நாளை வாழ்வில்
பெரிதும் அல்லல் சூழுமே!

ஜெய்ராம்ஜி





கிலிக்குப் பயந்த புலி!

முனியன் ஓர் ஏழைக் குடியானவன். கள்ளம், கபடு, சூது - வாது அறியாதவன். அவன் மனைவி முனியம்மாவும் அவனைப் போன்றே எளிமையானவள்.

ஒருநாள் அவர்கள் வீட்டிற்கு விருந்தினர் சிலர் வர இருந்தனர். முனியம்மா தன் கணவனைக் காட்டிற்குச் சென்று கொஞ்சம் விறகு வெட்டி எடுத்து வருமாறு கூறினாள்.

காட்டிற்குச் சென்ற முனியன் பட்டுப் போன மரத்தைத் தேடி இங்கு மங்கும் அலைந்து கொண்டிருந்தான். அப்போது ரத்னபுரிப் படை வீரர்கள் கொள்ளையன் ஒருவனை விரட்டிக் கொண்டு அப் பகுதிக்கு வந்தனர். அவர்களைக் கண்ட முனியன் மிகவும் பயந்து இங்குமங்கும் ஓடலானான். வீரர்களிடமிருந்து தப்பிப்பதற்காகத் தலை தெறிக்க ஓடி வந்த அக் கொள்ளையன் முனியனின் மீது மோதித் தலை குப்புற விழுந்தான். வீரர்கள் விரைந்து வந்து அவனைக் கைது செய்தனர். அங்கு செய் வதறியாது வெலவெலத்து நின்று கொண்டிருந்த முனியனையும் கொள் ளையனுடன் அழைத்துச் சென்று மன்னர் முன் நிறுத்தினார்கள்.

வீரர்கள் நடந்தவற்றை மன்னனிடம் கூறினர். கொள்ளையன் பிடிபடுவதற்கு முனியனே காரணம் என்று கருதிய மன்னன் அவனுக்கு வெகுமதி அளித்ததோடு அரசப் பணியும் கொடுத்து கௌரவித்தான்.

ரத்னபுரி மன்னனிடம் குதிரைப் பண்ணை, மாட்டுப் பண்ணையோடு, மிகப் பெரிய செம்மறியாட்டுப் பண்ணை ஒன்றும் இருந்தது. அதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட செம்மறியாடுகள் கொழுத்து வளர்ந்திருந்தன.

காட்டுப் பகுதியிலிருந்து நாட்டுப் பகுதிக்கு வந்த புலி ஒன்று ஆட்டுப் பண்ணையினுள் புகுந்து அன்றாடம் ஓரிரு ஆடுகளை அடித்து தின்ன லாயிற்று. ஆனால் பண்ணைக் காவலர்களால் புலியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. புலி பண்ணையினுள்ளேயே பதுங்கி இருந்தது.

மன்னன் ஆடுகளைக் காப்பாற்றும் பொறுப்பை முனியனிடம்

ஒப்படைத்தான்.

ஒருநாள் இரவு கும்மிருட்டில் முனியன் ஆட்டுப் பண்ணைக்குப் போய்ச் சேர்ந்தான். புலியை விரட்ட என்ன செய்வதென்று அறியாது அஞ்சி நடுங்கி ஓரிடத்தில் நின்றான். தன்னைக் காப்பாற்றுமாறு இறைவனை வேண்டிக் கொண்டான். தனக்குத் தானே துணிவூட்டிக் கொள்வதற்காகப் பெருத்தக் குரலில் வீர வசனம் பேசலானான்: ''நான் எப்படியேனும் அந்தப் புலியைப் பிடித்து விடுவேன். அது புலி என்றால் அதைத் தீர்த்துக் கட்டும் கிலி நான்.''

அவனுடைய குரல் கேட்டுப் பண்ணைக் காவலர்கள் ஓடோடி வந்தனர். அவர்களை நோக்கி, ''இந்தப் புலியை ஒழித்துக் கட்ட நான் ஒருவனே போதும். நீங்கள் அனைவரும் இந்த இடத்தை விட்டு வெளியேறுங்கள்'' என்று கூச்சலிட்டான். காவலர்கள் வெளியேறினர்.

மிகுந்த வீராப்புடன் அவர்களை வெளியேற்றினாலும், முனியனின் பயம் அதிகரித்தது. அவன் மனதினுள் சிந்திக்கலானான். 'நமக்கு இந்த வேலையும் வேண்டாம். மன்னனின் பாராட்டுதல்களும் வேண்டாம். சொத்து, சுகங்களும் வேண்டாம். எங்கேனும் ஓடிச் சென்று உயிர் பிழைத்தால் போதும். நன்கு கொழுத்த ஆடு ஒன்றைத் தூக்கிக் கொண்டு கண்காணாத இடத்திற்கு ஓடி விடுவோம்' இவ்வாறு எண்ணிய முனியன் தன் பயத்தைப் போக்கிக் கொள்ள மீண்டும் வீர வசனம் பேசினான்.

முனியனின் வீர வசனத்தைக் கேட்ட புலி அஞ்சி, நடுங்கியது. ஆடுகளின் நடுவே பதுங்கியிருந்த புலி அச்சத்தில் கண்களை இறுக மூடிக் கொண்டு அசையாது படுத்துக் கிடந்தது. முனியன் மீண்டும் ஒருமுறை கூவினான்: ''அது ஆட்டைக் கொல்லும் புலி. நானோ புலியையே கொல்லும் கிலி'' என்றான்.

கிலி என்றால் தன்னைவிட மிகப் பெரிய மிருகமாக இருக்கும் போலிருக்கிறது என்று கருதிய புலி, அதனிடமிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கத்தோடு மூச்சை அடக்கிப் படுத்துக் கிடந்தது.

கும்மிருட்டில் கொழுத்த ஆட்டைத் துழாவித் தேடிக் கொண்டிருந்த முனியன் கைக்குப் புலி தட்டுப்பட்டது. அதுவே கொழுத்த ஆடு என்று கருதிய முனியன் அதன் கழுத்தில் தான் வைத்திருந்த கயிற்றால் இறுகக் கட்டினான். முன்னங்கால்களையும், பின்னங்கால்களையும் தனித் தனியாகக் கட்டினான். அதைத் தன் தோளில் சுமந்து கொண்டான். இதுதான் கிலி என்று கருதிய புலியும் அவன் தோள் மீது அசையாது



• மிளகுக்குப் பெயர் பெற்ற மாநிலம் கேரளம்.

கிடந்தது.


வீட்டை அடைந்த முனியன் புலியை ஒரு மூலையில் கட்டிப் போட்டான். மனைவிக்குக் குரல் கொடுத்து விளக்கு எடுத்து வரச் சொன்னான். ஆடு எவ்வளவு கொழுத்ததாக இருக்கிறது என்பதைக் காணப் பரபரத்தான்.

முனியனின் மனைவி விளக்கோடு வந்தாள். வெளிச்சத்தில் புலியைப் பார்த்ததுமே திடுக்கிட்ட அவள் பயந்து, தள்ளிப் போய் நின்றாள். புலியும் அவர்களைப் பார்த்துச் சினத்துடன் உறுமியது. ஆனால் கட்டுண்ட நிலையில் அதனால் எதுவும் செய்ய முடியவில்லை.

மீண்டும் ஒருமுறை முனியனுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. அவன் புலியைப் பிடித்துவிட்ட தகவலறிந்த மன்னன் மகிழ்ச்சியுற்று அவனைத் தன் ராணுவத்தில் அதிகாரியாக நியமித்தான்.

ரத்னபுரியில் மன்னனுக்குச் சொந்தமான தென்னந்தோப்புகள் பல இருந்தன. ஒவ்வொரு தோப்பிலும் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் காய்த்துச் செழித்திருந்தன. காட்டை விட்டு நாட்டிற்குள் புகுந்த கரடி ஒன்று தென்னை மரங்களில் ஏறிக் காய்களையும், இளநீர்களையும் சேதப்படுத்திக் கொண்டிருந்தது. தோட்டத்துக் காவலர்களாலும், ராணுவ வீரர்களாலும், கரடியைப் பிடிக்க முடியவில்லை. எனவே, மன்னன் அக் கரடியைப் பிடிக்குமாறு முனியனுக்கு ஆணையிட்டான். மன்னனின் ஆணையை மீற முடியாத முனியன் கரடியைப் பிடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானான்.

ஒரு நாளிரவு முனியன் ஈட்டியையும், தீப்பந்தத்தையும் எடுத்துக்







அமெரிக்காவின் இருபதாவது அதிபரான ஜேம்ஸ் கார்ஃபீல்ட் ஒரே சமயத்தில் ஒரு கை மூலம் கிரேக்க மொழியையும், மற்றொரு கை மூலம் லத்தீன் மொழியையும் எழுதும் திறன் பெற்றவர்.

- எம். வினோத்,
சங்கரன்கோவில்.

• நவக்கிரக தலங்கள் உள்ள மாவட்டம் தஞ்சாவூர்.

கொண்டு தென்னந்தோப்பை அடைந்தான். போகும் வழியில் பலத்த காற்று வீசியதால், தீப்பந்தம் அணைந்துவிட்டது. தோப்பினுள் நுழைந்த அவன் ஈட்டியை ஓரிடத்தில் செங்குத்தாக நட்டுவிட்டுப் பந்தத்தை ஏற்றிக் கொள்வதற்காகத் தீ மூட்டினான். அப்போது கரடி அவனருகே இருந்த தென்னை மரத்தின் மீது அமர்ந்திருந்தது.

தீயைப் பார்த்ததுமே பயந்த கரடி தரையை நோக்கிப் பாய்ந்தது. முனியனின் அதிர்ஷ்டம் அங்கும் அவனுக்குக் கை கொடுத்தது. கீழ்நோக்கிப் பாய்ந்த கரடி நேராக ஈட்டியின் மீது விழுந்து உயிர் விட்டது. அவ்வழியே வந்த ராணுவ வீரர்கள் மன்னனிடம் இச் செய்தியைக் கூறினர்.

தென்னந்தோப்புகளையும், ஊரையும் கரடியிடமிருந்து காப்பாற்றியமைக்காக மிக மகிழ்ந்து முனியனைத் தன் மெய்க்காப்பாளனாக நியமித்துக் கொண்டான் மன்னன்.

சிறிது காலம் கழிந்தது. ரத்னபுரியின் மீது வேற்று நாட்டுப் பகை மன்னன் படையெடுத்து வந்தான். அவனோடு போர் தொடுக்கும் பொறுப்பை மன்னன், முனியனிடம் ஒப்படைத்தான். போர்க்குணம் சிறிதும் இல்லாத முனியன் மிகப் பயந்தபோதிலும் மன்னனின் ஆணையை எதிர்த்து ஏதும் சொல்ல முடியவில்லை. சிறிது நேரச் சிந்தனைக்குப் பிறகு ஓர் உபாயம் தோன்றியது. எந்தக் கஷ்டத்திலும் தன்னைக் கைவிடாத தன் இஷ்ட தெய்வத்தின் மீது பாரத்தைப் போட்டு முனியன் செயலில் இறங்கினான்.

குதிரை லாயத்திற்குச் சென்று கிழட்டுக் குதிரை ஒன்றைத் தேர்ந்தெடுத்தான். அருகில் நின்ற வீரனை அழைத்துத் தன்னைக் குதிரையின் முதுகோடு, சங்கிலியால் இறுகப் பிணைக்குமாறு கூறினான். இந்த ஏற்பாட்டோடு வேறு வழியின்றிப் போருக்கு ஆயத்தமானான். போர் முரசு முழங்கியது.

அவனோடு புறப்பட்ட பிற வீரர்களின் போர்க்களப் பயிற்சியற்றக் குதிரைகள் தாறுமாறாக அங்குமிங்கும் சிதறி ஓடலாயின. ஆனால் பல போர்களில் பங்கேற்றுப் பழுத்த அனுபவம் பெற்றிருந்த முனியனின் கிழட்டுக் குதிரை மட்டுமே நேராக எதிரிகளை நோக்கி ஓடலாயிற்று.

'நாமொன்று நினைக்க இக் கிழட்டுக் குதிரை வேறொன்று நினைக்கிறதே' என்று மனம் பரிதவித்த முனியன், இப் பேராபத்திலிருந்து உயிர் தப்ப குதிரையைச் சுளீர் சுளீர் என்று சவுக்கால் அடித்து, இரண்டு பனை மரங்களினூடே செலுத்தினான். மரங்களினருகே சென்றதும் இரு கைகளாலும், இரு மரங்களையும் அணைத்துப் பிடித்துக் கொண்டான். தலை தெறிக்க ஓடிய குதிரையின் வேகத்தினால், இரு பனை மரங்களும் வேரோடு பெயர்ந்து அவனுடைய கைகளுக்கு வந்துவிட்டன.

இரு கைகளிலும் இரு மரங்களோடு விரைந்து வரும் முனியனைக் கண்டதுமே எதிரிப் படை பேதலித்து விட்டது. இவ்வளவு பலமுள்ள படைத் தலைவனோடு போர் புரிய இயலாது என்று எதிரிப் படை வீரர்கள் தம் படைத் தலைவனிடம் புலம்பினர். அவன் எவ்வளவோ கூறியும், அவனுடைய ஆணையை மீறி, எதிரிப் படை வீரர்கள் தலை தெறிக்கச் சிதறி ஓடினர். போரின்றியே படையெடுப்பு முடிந்தது.

ரத்னபுரி மன்னன் வெற்றி பெற்றான். நடந்தது ஏதுமறியாத முனியன் மன்னனின் பாராட்டைக் குழப்பத்துடன் தலை குனிந்து ஏற்றுக் கொண்டான்.

இடமிருந்து வலம்

1. இந்நாட்டின் தலைநகர் இஸ்லமாபாத் (5)
4. ரிக் என்பது______(3)
7. நண்டு குறிக்கும் ராசி (4)
10. ஏகலைவனின் பெரு ______ பலி கொடுக்கப்பட்டது (3)

வலமிருந்து இடம்

2. நேற்று பெய்த மழையில் இன்று முளைத்தது ______ (3)
6. பூமிக்கு அடுத்த கோள் (4)
9. வியாபாரிகள் ஒன்று கூடி பொருட்களை விற்கும் இடம் (3)
12. பிரகதீஸ்வரர் கோயில் இங்கு உள்ளது (5)

மேலிருந்து கீழ்

1. கசப்பு சுவையுடைய காய் (5)
2. கூடி உண்ணும் பறவை (3)
8. குழம்பு வகைகளில் ஒன்று (4)
9. பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக காகிதம், ______ பைகளை உபயோகிக்கலாம்.(3)


கீழிருந்து மேல்


3. செவிலியர் (3)
4. முருகனுக்கு இன்னொரு பெயர் (3)
5. பரமசிவன் கழுத்திலிருந்த பாம்பு இதைப் பார்த்து ‘சௌக்கியமா?’ என்று கேட்டது (4)
10. அர்ஜுனன் வில்______யில் சிறந்தவன் (3)
11. ரதம் ஓட்டுபவர் (3)
12. நரியை இந்தக் குணத்துக்கு உதாரணமாகச் சொல்வார்கள் (5)

- பி. பாண்டி, பத்தாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, பள்ளபட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

விடை 58 ஆம் பக்கம்


குறுக்கெழுத்துப் புதிர்



மசாலா

முதலைகள் எந்த மாதிரியான இடங்களில் முட்டை இட நேர்ந்தாலும் அரை அடி ஆழத்திற்கு மணலைத் தோண்டி முட்டை இடுகின்றன. முட்டைக்குள் முதலைக் குட்டி நன்கு வளர்ந்தபின் ஒரு வித சத்தத்தை உண்டாக்கும். இந்தச் சத் தத்தைக் கேட்கும் தாய் முதலை



எங்கிருந்தாலும் எல்லாவிதத் தடை களையும் மீறி வந்து, முட்டையிலிருந்து வெளிவந்த குட்டிகளைத் தண்ணீருக்குள் அழைத்துச் செல்லும்.

- மு. சுகன்யா, ஆறாம் வகுப்பு, சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி, இராமநாதபுரம்.



எறும்புப் புற்று பூமிக்குக் கீழே பல அறைகள் கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு அறைக்கும் போய் வரும் பாதைகள் இருக்கும். அசா தாரண பலம் கொண்ட எறும்பு தன் எடையைப் போல 50 மடங்கு எடையைத் தூக்கக் கூடியது.

— நெ. இராமன், சென்னை.

என்சைக்ளோபீடியா என்பது கிரேக்கச் சொல், இதற்குப் பொது அறிவு என்று பொருள். 16ம் நூற்றாண்டு முதல் ஆங்கிலேயர்கள் இந்தச் சொல்லைப் பயன் படுத்த ஆரம்பித்து விட்டனர். கி.பி முதல் நூற்றாண்டில் பிளினி எழுதிய இயற்கை வரலாறு என்ற கலைக்களஞ்சியம்தான் மிகப் பழைமையானதாகும். 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜான்ஹாரிஸ் என்னும்



இங்கிலாந்துக்காரர் அகரவரிசைப்படி தொகுக்கும் முறையைக் கண்டறிந்தார். உலகப்புகழ் வாய்ந்த பிரிட்டானிகா கலைக் களஞ்சியத்தின் முதல் பாகம் கி.பி. 1751ல் வெளியானது.

இந்தியாவின் முதல் கலைக் களஞ்சியம் மராத்தி மொழியில் எஸ்.வி. கெட்கர் என்பவரால் மகாராஷ்ட்ரிய ஞானகோசு என்ற பெயரில் வெளியிடப் பட்டது. தமிழ் மொழியின் முதல் கலைக் களஞ்சியம் அறிஞர் பெரியசாமித்தூரன் தலைமையில் அமைந்த குழுவால் 1954ல் வெளியிடப்பட்டு 10 பாகங் களாக வெளி வந்தது.

- எஸ். ராஜம், கரூர்.


மாவீரர் நெப்போலியன் எப்போதும் சுறுசுறுப்பாகப் பணியாற்றக் கூடியவர். தன்னுடைய பொருட்கள் அனைத்திலும், சிம்மாசனம் உட்பட - தேனீயின் உரு வத்தைப் பொறித்திருந்தார். அரண்மனை யில் தேனீயின் உருவம் பொறிக் கப்பட்ட ஒவ்வொரு பொருளும் அவருக்குச் சொந்தமானது. சுறுசுறுப்புக்குப் பெயர் பெற்ற தேனீயின் உருவத்தை அவர் தேர்ந்தெடுத்தது பொருத்தம்தானே!



- ஜி. ப்ரணவ், கரூர்.

பாப்கார்ன்

உலகம் தோன்றியது முதல் எவ்வித பரிணாம வளர்ச்சி மாற்றமும் இல்லா



உயிரினம் கரப்பான் பூச்சி.

ஒரு தெளிவான இரவில் வானத்தில் கருவிகளின் துணையின்றி சுமார் 6000 நட்சத்திரங்களை நாம் காண இயலும்.


உலகில் முதுகெலும்பு தரையில் படுமாறு படுத்து உறங்கும் ஒரே ஜீவன் மனிதன்தான்.

- ஏ.எல். ராவியாகனி, காரைக்கால்.



வானிலுள்ள மின்காந்த அலைகளைக் கண்டுபிடித்தவர் ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல் ஆவார். இவர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். 1864ல் இந்த அலைகளைக் கண்டுபிடித்தார். இந்தக் கண்டுபிடிப்பு இல்லையென்றால் வானொலியையும், தொலைக் காட்சியையும் நாம் கேட்டு, கண்டு களிக்க முடியாது.

- கழனி. காசிராஜன், ஆலங்குளம்.



'கிளின் சீபர்' என்ற விலங்கியல் அறிஞர் வெட்டுக் கிளிகளை ஆய்வு நடத்தினார். இவரது ஆராய்ச்சியின் மூலம், வெட்டுக்கிளி ஒரே இரவில் 160 கி.மீ முதல் 640 கி.மீ வரை பறந்து செல்ல முடியும் என்று தெரிய வந்துள்ளது. தனியே பறந்து வரும் வெட்டுக்கிளி உணவு உள்ள இடத்தை அடைந்ததும் ஒருவகை இராசாயனப் பொருளைத் தன் உடலிலிருந்து வெளியேற்றுகிறது. இதனை முகர்ந்து கொண்டு வரும் கோடிக்கணக்கான வெட்டுக்கிளிகள் ஒன்று சேர்ந்து உணவை அப்படியே 'லபக்' செய்து விடுகின்றன.

- மு. சுகன்யா, இராமநாதபுரம்.

கே. போக் என்ற அமெரிக்கர் ஒரே ஒரு நாள் மட்டும் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார். அந்த நாள் 03.03.1949.

- எம். வினோத், சங்கரன்கோவில்.

தாங்கும் தூண்கள் இல்லாமல் தொங்கிக் கொண்டிருப்பது போல அமைந்த ஹௌரா பாலத்தைக் கட்டி முடிக்க எட்டு வருடங்களாயிற்று. 1943ல் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்ட இது, கல்கத்தா - ஹௌராவை இணைக்கிறது. இதன் நீளம் 2160 அடி. வெயில் காலத்தில் நீளவும், குளிர்காலத்தில் சுருங்கவும் கூடியது. இவ்வாறு 48 அங்குலம் விரிந்து சுருங்கும்.

- ஆர். பிரகாசம், மருதநாடு.



சொல்லுங்கள் விடை என்ன?

I 1) ஒருமுறை சொன்னேன். இன்னொரு முறை வந்தது - அது என்ன?

2) கொண்டையிலே பூ வைத்தவன், கூவித் திரிகிறான் - அது என்ன?

3) ஒலி கொடுத்து உரையாடுவான் - அவன் யார்?

4) வெளிச்சத்தில் உடன் வருவான். இருட்டில் வர மாட்டான் - அவன் யார்?

5) ஆயிரம் அறைகள். அத்தனையும் இனிப்பறைகள் - அது என்ன?

6) வாலில் ஆயுதம் வைத்து பயமுறுத்துவான் - அவன் யார்?

- உமா பகவதி, ஆறாம் வகுப்பு,
சேனைத்தலைவர் உயர்நிலைப்பள்ளி,
விக்கிரமசிங்கபுரம்.

II 1) தண்ணீரில் நீந்தி வருவான், தரையில் தாண்டி வருவான் - அது என்ன?

2) உடல் இல்லாமல் ஊரெல்லாம் திரிவான் - அது என்ன?

3) பருத்த வயிற்றுக்காரன் படுத்தே கிடப்பான் — அது என்ன?


4) பறக்கும். ஆனால் பறந்து செல்லாது - அது என்ன?

5) வரிக்குதிரை ஓடியது, வாய்ப்பாட்டுப் பாடியது - அது என்ன?

- எஸ். ஜெயந்தி, ஒன்பதாம் வகுப்பு,
சேனைத்தலைவர் உயர்நிலைப்பள்ளி,
விக்கிரமசிங்கபுரம்.

III. 1. கட்டாத சுவருக்குள்ளே, வற்றாத ஊருக்குள்ளே எலும்பில்லாத மனிதன் எகிறி எகிறி குதிக்கிறான் - அவன் யார்?

2) காட்டுக்குள் ஒரு கறுப்பன்; கனமான உடல் தூக்கி ஆட்டம் போட்டு ஓடிடுவான். தேனென்றால் கொள்ளை விருப்பம் - அவன் யார்?



3) சட்டை போட மாட்டான், ஆனால் பை மட்டும் உண்டு - அவன் யார்?

4) செக்கச் சிவப்பி நாங்கள், தீயில் வெந்தோர் நாங்கள், சிறு கல்லு பட்டாலும் செத்து போவோம் - நாங்கள் யார்?

5) தண்ணீர் இல்லாமல் வளரும். தரையில்லாமல் படரும். வளைந்து நெளிந்து ஆடும், வாசனைப் பூ கேட்கும் - அது என்ன?

- எஸ். சபீதா,
ஒன்பதாம் வகுப்பு,
சேனைத் தலைவர்
உயர்நிலைப்பள்ளி,
விக்கிரமசிங்கபுரம்.

IV. 1) காற்றுக்குப் பருத்தவன், உயரத்தில் பறக்கிறான், வெயிலுக்கு வெடிக்கிறான் - அவன் யார்?

2) அங்கே சிலுக்குவாள், இங்கே பிலுக்குவாள். கதவு மூலையில் ஒண்டிக் கொள்வாள் - அவள் யார்?

3) அங்குமுத்து தோட்டத்தில் தொங்குமுத்து ஆடுது; அதனை எடுத்து வாயில் போட்டால் திக்குமுக்காடுது நாக்கு - அது என்ன?

— ஏ. சீனிவாசன்,
பத்தாம் வகுப்பு,
சேனைத்தலைவர் உயர்நிலைப்பள்ளி,
விக்கிரமசிங்கபுரம்

விடைகள்:
I 1) எதிரொலி 2) சேவல் 3) டெலிபோன் 4) நிழல் 5) தேன்கூடு 6) தேள்
II. 1) தவளை 2) புகை 3) தலையணை 4) கொடி 5) இசைத்தட்டு
III 1) நாக்கு 2) கரடி 3) கங்காரு 4) மண்பானை 5) கூந்தல்
IV. 1) பலூன் 2) துடைப்பம் 3) மிளகாய்



ஆண்டிரின் டினோலா, ஐந்தாம் வகுப்பு, டேனியல் தாமஸ் மெட்ரிக் பள்ளி, திசையன் விளை.



எஸ்.ரூபினா ஜெனிஃபர், ஐந்தாம் வகுப்பு, எம்.வி.எம். வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மாவடி.

திருநெல்வேலி ஸ்பெஷல்



எம்.திவ்யா, ஒன்பதாம் வகுப்பு, எம்.வி.எம். வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, மாவடி.



ஸ்ரீ.பத்மா, ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ ராமானுஜம் மெட்ரிக் பள்ளி, நான்குநேரி.

புத்திசாலிக் குரங்கும் ஏமாளிப் புலியும்



ஒரு காட்டில் பல மிருகங்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. அதில் ராமு என்றொரு குரங்கு இருந்தது. ஒரு நாள் அதற்கு மாங்காய்கள் பல கிடைத்தன. அவற்றைப் பழுக்கவைக்க ஒரு குகையில் வைத்தது ராமு.

சில நாட்கள் கழிந்த பின்னர் காய்கள் மாம்பழமாயின. மாம்பழங்களைத் தின்பதற்காக ராமு தனது நண்பர்களை அழைத்துக் கொண்டு குகைக்கு வந்தது. அங்கே அவர்கள் கண்ட காட்சி அவர்களுக்குப் பழம் சாப்பிடும் ஆசையே இல்லாமல் செய்துவிட்டது.

பழங்கள் வைத்த குகைக்கு முன் சுபு என்ற புலி படுத்து கிடந்தது. ராமு சுபுவை எப்படி அப்புறப்படுத்துவது என்று யோசித்தது. திடீரென்று அதற்கு ஒரு 'பளிச்' ஐடியா தோன்றியது. அது தனது நண்பர்களை அழைத்து அவர்கள் காதில் சில ரகசியத் திட்டங்களைக் கூறியது.

சிறிது நேரத்தில் ராமுவின் திட்டம் செயல்படத் துவங்கியது. ஈஸ்வர் எனும் கழுகு புலியின் முன் வட்டமிட்டது. புலிக்குப் பக்கத்தில் சென்று ''ஏய் சுபு, என்ன உன் தலையில் கொம்பு முளைக்கிறது'' என்றது.

சுபு தனது தலையைத் தடவிப் பார்த்தது. ஆனால் ஈஸ்வர் சொன்ன கொம்பு விஷயம் மனதில் இருந்ததால் கொம்பு முளைப்பதாக நினைத்தது. உண்மையிலேயே கொம்பு எதுவும் முளைக்கவில்லை.

சிறிது நேரம் கழித்து பொன்னு என்னும் கிளி சுபு புலியின் அருகே வந்தது. ''சுபு, உனது தலையில் உள்ள கொம்புகள் எவ்வளவு அழகாக உள்ளன!'' என்றது.

சுபு புலியோ, 'உண்மையாகவே கொம்புகள் முளைக்கிறதா!' என்று அதிசயித்தது.

சிறிது நேரம் கழித்து ராமு, சுபுவின் பக்கம் வந்து மிகுந்த ஆச்சரியத்துடன், ''உன்னுடைய கொம்புகள் எவ்வளவு

அழகாக உள்ளன. ஆற்றில் மிகத் தெளிவாகத் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது. அதில் அழகான கொம்புகளை நீ பார்க்கலாம். உடனே கிளம்பு'' என்று சுபுவை உசுப்பி விட்டது.

இவற்றை எல்லாம் கேட்ட முட்டாள் சுபு, தனது அழகான கொம்புகளைக் காண வேண்டும் என்று ஆவலுடன் எழுந்தது. பின்னர் ஆற்றை நோக்கிப் பாய்ந்து ஓடியது.


அதைக் கண்ட ராமு குரங்கு அழகாகச் சிரித்தது. தனது நண்பர்களிடம் ''எப்படி சுபு புலியைக் கிளப்பிவிட்டேன் பார்த்தீர்களா! இனி வாருங்கள் நாம் எல்லோரும் மாம்பழங்கள் சாப்பிடலாம்'' என்றழைத்தது.

பின்னர் ராமு தன்னுடைய நண்பர்களை அழைத்து கொண்டு குகைக்குச் சென்றது. குகைக்குள் ஆர்பாட்டத்துடன் மாம்பழ விருந்து நடை பெற்றது.

- ஷிவபிரபா, ஏழாம் வகுப்பு,
சேனைத் தலைவர் மேல்நிலைப்
பள்ளி, விக்கிரமசிங்கபுரம்

அல்வா

திருநெல்வேலி என்றவுடன் 'அல்வா' என்பதுதான் அனைவரது ஞாபகத்திற்கும் வரும். ஆனால் ஒருவரை ஏமாற்றுவதையும் 'அல்வா கொடுப்பது' என்று கூறுகிறோம். இப்பேச்சு வழக்கு எப்படி வந்தது தெரியுமா?



திருநெல்வேலி அல்வாவை வாயில் வைத்தவுடன் அதன் இனிப்புச் சுவை தெரியாது. ''சே! என்ன இது? இனிப்பே இல்லை!'' என்று மென்று விழுங்க ஆரம்பித்தவுடன் தான் அதன் சுவையை உணர முடியும்.

இவ்வாறு அது நம்மை ஏமாற்றிக் கொண்டு உள்ளே செல்வதால், ஏமாற்றுவதை 'அல்வா கொடுப்பது' என்னும் பேச்சு வழக்கு வந்தது.

- எம். வினோத், சங்கரன்கோவில்

முண்டந்துறை சரணாலயம்

மாவடி எம்.வி.எம். வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவி



*** அனுசுயா, பாலு, சங்கீதா**

களான நாங்கள் களக்காடு வனச்சரக அலுவலர் பாலுவிடம் முண்டந்துறை புலிகள் காப்பகம் பற்றி கேட்டோம்.

அனுசுயா : களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் எந்த ஆண்டு தொடங்கப் பட்டது?

பாலு : 1988ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. இந்தியாவிலே 17ஆவது சிறந்த புலிகள் காப்பகமாக இது திகழ்கிறது.

சங்கீதா : இங்கு எந்த வகையான விலங்குகள் பாதுகாக்கப்படுகின்றன?

பாலு : அதிகமாகப் புலிகள், யானை, கரடி, மிளா, மான் வகைகள், மர அணில், அழுங்கு, சிங்கவால் குரங்கு, காட்டுப் பன்றி, பாம்பு வகைகள், தவளை வகைகள், பலவிதமான பறவைகள் போன்றவை

பாதுகாக்கப்படுகின்றன.

அனுசுயா : எத்தனையோ மலைகளும் காடுகளும் இருக்கும்போது களக்காடு மலைப்பகுதி சரணாலயமாக மாற்றப்பட்ட தற்கான காரணம் என்ன?

பாலு : இங்கு விலங்குகளும், பறவை களும் தங்குவதற்கு ஏற்றவிதத்தில் இட வசதி அமைந்துள்ளது. ஆறுகள் அதிக மாகப் பாய்வதால் குடிநீருக்குப் பிரச்னை இல்லை. விலங்குகளும் சுதந்திரமாகச் சுற்றித் திரிய வசதிகள் உள்ளன.

அனுசுயா : எத்தனை விலங்குகள் வாழ்கின்றன என்று எப்படி கணக்கிடு வீர்கள்?

பாலு : யானைகள், புலிகள் போன்றவற் றைக் கணக்கிடும்போது அவற்றின் கால் தடங்களை வைத்து அவற்றின் வயதையும், எண்ணிக்கையையும் கணக்கிடுவோம். எல்லா விலங்குகளையும் ஓரளவு தோராய மாகக் கணக்கிடுவோம்.

சங்கீதா : எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை கணக்கெடுப்பீர்கள்?

பாலு : ஆண்டு தோறும் ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை விலங்குகள் கணக்கெடுக்கப்படுகின்றன.

சங்கீதா : இது ஒரு சுற்றுலாத் தலமா?

பாலு : இது ஒரு சுற்றுலாத்தலமல்ல.

அனுசுயா : ஏன் இதை நீங்கள் சுற்று லாத்தலமாக ஆக்கவில்லை?

பாலு : சுற்றுலாத்தலமாக ஆக்கினால் பொது மக்களால் விலங்குகளுக்குத் தொந் தரவு நேரிடும். தேவையற்ற குப்பைகள் அதிகமாக மலைப் பகுதியில் சேரும். விலங்குகள் நிம்மதியாக சுற்றித் திரிய முடியாது.

அனுசுயா : இந்தச் சரணாலயத்தின் பராமரிப்புச் செலவை மத்திய அரசு ஏற் குமா? மாநில அரசு ஏற்குமா?

பாலு : மத்திய அரசு பாதிச் செல வினையும், மாநில அரசு பாதிச் செல வினையும் ஏற்கின்றன.

- அனுசுயா, எம்.வி.எம்.
வித்யா மந்திர் மெட்ரிக் பள்ளி,
மாவடி.

அன்னை தெரசா



அன்பே மூச்சாகி
அறிவே துணையாகி
கருணையே கண்களாகி
உள்ளமே கோவிலாகி
கைகளே சேவையாகி
உடலே பரந்த மனப்பான்மையாகி
நாவே நற்சொற்களாகி
நீ மறைந்தாலும் உன் மூச்சுக்காற்று
உலகமெங்கும் பரவி ஒவ்வொருவர்
உள்ளத்திலும் தீபமாகிச் சுடர் விடும்!

- எஸ். ஜெயந்தி, ஒன்பதாம் வகுப்பு,
சேனைத் தலைவர் மேல்நிலைப்
பள்ளி, விக்கிரமசிங்கபுரம்.

தகவல் துளிகள்

திருநெல்வேலி மாவட்டம் கி.பி. 1790ம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி யரால் உருவாக்கப்பட்டது.

திருநெல்வேலி ரயில்வே ஸ்டேசன், 1875ம் ஆண்டு இங்கிலாந்தின் வேல்ஸ் இளவரசர் இப்பகுதிக்கு வருகை புரிவதை முன்னிட்டுத் திறக்கப்பட்டது.

தமிழ்த் தாத்தா உ.வே. சாமி நாதய்யர் தொகுத்து வழங்கிய தமிழ் இலக்கிய பொக்கிஷங்களில் 90 சதவீதம் திருநெல் வேலி மாவட்டத்தில் இருந்து மட்டுமே திரட்டப்பட்டதாம்.

திருநெல்வேலியின் புகழ் பெற்ற தாமிரபரணி ஆறு, அகத்தியர் மலையில் தொடங்கி மன்னார் வளைகுடா வரை 125 கி.மீ. தூரம் பயணம் செய்கிறது. இதில் கட்டப்பட்ட முதல் அணை பாபநாசம் அணை. இது பிரிட்டிஷார் காலத்தில் 1944ம் வருடம் கட்டப்பட்டது.

- கோவி. இராஜேந்திரன்,
மதுரை

தென்னிந்தியாவின் ஆக்ஸ்ஃபோர்டு :

நெல்லையிலுள்ள 'பாளையங்கோட்டை' தென்னிந்தியாவின் ஆக்ஸ்ஃபோர்டு' எனப் பெயர் பெற்றது. அந்த அளவுக்கு அக்காலத்திலேயே கல்வியில் சிறந்து விளங்கியுள்ளது இந் நகரம். இங்கு புகழ் பெற்ற தூய சவேரியர் மேல்நிலைப் பள்ளி, தூய சவேரியர் கல்லூரி, தூய யோவான் பள்ளி, தூய யோவான் கல்லூரி, சாஃப்டர் மேல்நிலைப் பள்ளி, லயோலா கான்வென்ட், சாராள் தக்கர் மேல்நிலைப் பள்ளி, சாராள் தக்கர் கல்லூரி, அருள்மிகு காந்திமதி பள்ளி, ம.தி.தா. இந்து மேல் நிலைப் பள்ளி எனப் பழமையான பல கல்வி நிலையங்கள் உள்ளன.

- பாளை பசும்பொன்

உவரி புனித அந்தோனியார் ஆலயம் :

திருநெல்வேலி மாவட்டத்தில் திசையன் விளை என்ற ஊரின் அருகே உவரி என்ற ஒரு கிராமம் உள்ளது. அங்கே கடற்கரையின் அருகே எழில் மிகு தோற்றமுடையது புனித அந்தோனியாரின் திருத்தலமாகும்.

பக்தர்கள் வந்து தங்குவதற்கேற்ற பயணிகள் தங்கும் அறைகள் பல கோயிலின் அருகே உள்ளன. கோடை விடுமுறையில் மக்கள் பலரும் குடும்பமாக வந்து சந்தோஷமாகத் தங்கள் விடுமுறையைக் கழிக்கின்றனர்.

- பு. ஆரோக்கிய சுஷ்மா,
ஐந்தாம் வகுப்பு, டேனியல் தாமஸ்
மெட்ரிக் பள்ளி, திசையன்விளை.

நெல்லையில்...

நெல்லை மாநகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள அழகிய பெரிய திருக்கோவில் அருள்மிகு நெல்லையப்பர் அருள் தரும் காந்திமதி அம்பாள் திருக்கோவிலாகும்.

சுமார் 13 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இத் திருக்கோவில் சுமார் 600 ஆண்டுகளுக்கு முன், நின்ற சீர் நெடுமாறன் என்ற பாண்டிய மன்னரால் உருவாக்கப்பட்டது.



சங்கரன் கோவில் :

நெல்லையில் இருந்து 56 கி.மீ. தூரத்தில் உள்ளது சங்கரன்கோவில் அருள்மிகு சங்கர நாராயணசாமி கோவில்.

தென்காசி காசி விஸ்வநாதர் கோவில் :

நெல்லையில் இருந்து 53 கி.மீ. தூரத்தில் உள்ள தென்காசி காசி விஸ்வநாதர் கோவில் 400 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது.

கிருஷ்ணபுரம் :

நெல்லைச் சந்திப்பில் இருந்து 11 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது கிருஷ்ணபுரம். இங்கு விஷ்ணு கோவில் உள்ளது.

பாளையங்கோட்டை கதீட்ரல் சர்ச் :

பாளையங்கோட்டையில் உள்ள புனித கதீட்ரல் ஆலயம் பழைமை வாய்ந்தது. இது 1826ம் ஆண்டு ரெவரண்ட் ரேணியஸ் அவர்களால் கட்டப்பட்டது.

அருவி நகரம் குற்றாலம் :

நெல்லை மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தக் குற்றால நகரம் தோன்றியதாக வரலாறு கூறுகிறது. இங்கு மெயின் அருவி, புலியருவி, செண்பகாதேவி அருவி, ஐந்தருவி, தேனருவி, சிற்றருவி, பழைய குற்றால அருவி என ஏழு அருவிகள் உள்ளன. அருள்மிகு குற்றால நாதர் கோவில், படகு குழாம், சித்திரசபை இங்கு உள்ளன.

- டி. செல்வன்



வீட்டுத் தோட்டம்

குட்டிக் குட்டி பாகற்காய்
குண்டு குண்டு நெல்லிக்காய்
நீள நீளப் புடலங்காய்
நீண்டு வளரும் முருங்கைக்காய்
குப்பன் வீட்டுத் தோட்டத்திலே
குண்டு மல்லியும் உள்ளனவே
பச்சை மிளகாய் வளர்ந்தனவே
பசலைக் கீரை படர்ந்தனவே
தாகம் தணிக்கும் வெள்ளரிக்காய்
தரையைத் தடவும் பூசணிக்காய்
செக்கச் சிவந்த தக்காளி
செழிப்பாய் வளர்ந்தது தோட்டத்தில்
கொத்தாய் வளர்ந்தது கொத்தவரை
கொடியில் படர்ந்தது கோழியவரை
மஞ்சள் நிறத்தில் எலுமிச்சை
மாசி மாதத்தில் காய்த்தனவே
குப்பன் வீட்டுத் தோட்டம்போல்
நாமும் வளர்த்துப் பயன்பெறுவோம்.

- ச. சௌந்தர்ய பவதாரிணி,
எட்டாம் வகுப்பு,
சத்திரம் பாரதி மகளிர்
உயர்நிலைப் பள்ளி,
கடையம்.



திருநெல்வேலி ஸ்பெஷல்

ஹா... ஹா... ஹா...!



"15வது மாடியில் இருந்து ஒரு வாட்சைத் தவறவிட்டேன். ஆனால் கீழே வந்து பிடித்து விட்டேன். எப்படி?"

"வாட்ச் 10 நிமிடம் லேட்."

- மு. மெர்ஸி, ஆறாம் வகுப்பு, சேனைத் தலைவர் உயர்நிலைப் பள்ளி, விக்கிரமசிங்கபுரம்.

"அந்த வாத்தியார் ஏன் கூலிங் கிளாஸ் போட்டுக்கிட்டுப் பாடம் நடத்துறாரு?"

"பசங்க எல்லாம் ரொம்ப ஃபிரைட்"


- பி. ஜெமிசிங்க், ஏழாம் வகுப்பு, டேனியல் தாமஸ் மெட்ரிக் பள்ளி, திசையன்விளை



கலா : நான் இங்க கழுதை மாதிரி கத்திக்கிட்டு இருக்கேன். நீ அங்க என்ன பண்றே?

மாலா : நான் பேப்பர் தேடிக்கிட்டு இருக்கேன்!

- ஜே. உதயா, ஒன்பதாம் வகுப்பு, சேனைத் தலைவர் உயர்நிலைப் பள்ளி, விக்கிரமசிங்கபுரம்





கல்லூரி முதல்வர் : என்னப்பா, எவ்வளவு?

மாணவன் : 1009 சார்.

கல்லூரி முதல்வர் : இந்த மார்க்குக்குத் தானாகவே அட்மிஷன் கிடைத்திருக்க வேண்டுமே?

மாணவன் : ஹி... ஹி... இது என் ரிஜிஸ்தர் நம்பர் சார்!



"அம்மா.. தாயே... கொஞ்சம்..."

"பிச்சை இல்லை... போ"

"அட அதை யாரும்மா கேட்டா... கிரிக்கெட் ஸ்கோர் என்னம்மா?"

- ஆ. கவிதா, ஆறாம் வகுப்பு, திருமதி மஞ்சம்மாள் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தென்காசி


வெள்ளைப் புலி

பிற விலங்குகளை வேட்டையாடி சாப்பிடக் கூடிய பிராணிகளில் வெள்ளைப் புலியும் ஒன்று. வெள்ளைப் புலியைப் பற்றிப் பேச்சு அடிபடும் அளவிற்கு அவற்றின் எண்ணிக்கை இல்லை. மிகவும் சிறிய எண்ணிக்கையில் இருக்கும் அரிதான விலங்கு இந்த வெள்ளைப் புலி. உலகம் முழுவதும் உள்ள வெள்ளைப் புலிகளின் எண்ணிக்கை நூற்றுக்கும் குறைவானதுதான். வெள்ளைப் புலிகளை உயிரியல் பூங்காக்களைத்தவிர வேறு எங்கும் பார்க்க முடியாது.



மிகவும் அழகான, வேகமாக ஓடக் கூடிய பிராணி புலி. 4000 புலிகள் இந்தியாவில் உள்ளன. அவற்றில் 26 வெள்ளைப் புலிகளே உள்ளன.

1951ஆம் ஆண்டு மஹாராஜா ஸ்ரீ மார்தாண்ட் சிங் ஆண் வெள்ளைப் புலி குட்டியைக் கண்டறிந்தார். அந்தக் குட்டிக்கு மோஹன் என்று பெயர் சூட்டி தம் அரண்மனையில் வளர்த்து வந்தார். மோஹன் வளர்ந்து, சாதாரண புலியுடன் சேர்ந்து குடும்பம் நடத்தி மூன்று குட்டிகள் பிறந்தன. அதில் ஒரு வெள்ளைப் புலி கூட இல்லை. இந்தப் பெண் குட்டிகள் வளர்ந்து, பெற்றெடுத்த குட்டிகளில் வெள்ளைப் புலிகள் இருந்தன. அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாட்டில் இருக்கும் வெள்ளைப் புலிகள் மோஹனின் வழித் தோன்றல்கள்தான்.



இன்று வெள்ளைப் புலிகள் பாதுகாக்கப்பட வேண்டிய பிராணிகளின் பட்டியலில் உள்ளன. இவற்றை வேட்டையாடுதல், விற்பனை செய்தல் போன்றவை குற்றமாகக் கருதப்படுகிறது.

அரிய பிராணியைப் பாதுகாக்க வேண்டியது நம் அனைவரது கடமை!

தகவல் மற்றும் படங்கள் :

- தேபபிரதா பானர்ஜி





உங்களிடமிருந்து...

பாடலும் ஓவியமும் அழகு! காட்டுக் கோப்பை கதை மூலம் சிங்கராஜாவின் புத்திசாலித்தனம் புரிந்தது.

- ப. சிவரஞ்சனி, ஒன்பதாம் வகுப்பு, தூய வளனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மன்னார்குடி.

இரட்டிப்பு மகிழ்ச்சி...

ஜூன் இதழில் ஓவியப் போட்டி முடிவுகளில் எனக்கு இரண்டாம் பரிசு கிடைத்துள்ளது. பலமுறை போட்டியில் கலந்து கொண்டும் தற்போது கிடைத்துள்ள இரண்டாம் பரிசு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. இதே போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றுள்ள கடையம் சௌந்தர்யபவதாரணி என் சித்தி மகள். அண்ணனுக்கும் தங்கைக்கும் பரிசு கிடைத்தது. எங்கள் குடும்பத்தில் அனைவருக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நன்றி.

- எம்.ஜெகதீஸ் சந்தர், இடைப்பாடி.

நீர் வந்தது!

ஜூன் இதழ் கோடை தாகத்துக்கு இளநீர் பருகியது போல் இருந்தது. திருநெல்வேலி மாணவர் ஸ்பெஷல் அருமையாக இருந்தது. அன்னை தெரசாவின் வாழ்க்கையைப் படித்தபோது கண்களில் நீர் வந்தது.

- தி.சே. அறிவழகன், திருப்புலிவனம்.

பின்னணி அருமை!

ஜூன் இதழில் எல்லாப் படைப்புகளும் சூப்பர். அட்டைப்படப் பின்னணி (சரணாலயம்) அருமையாக இருந்தது. நெட் பிட்ஸ் பகுதியில் வெளிவந்த ஜோக்ஸை என் தம்பி மிகவும் ரசித்துப் படித்தான். அன்னை தெரசாவைப் பற்றிய கட்டுரையும், ஆடுகளைப் பற்றிய செய்திகளும் இதழுக்கு மேலும் சிறப்பு சேர்த்தன. கைபோனது பதவி வந்தது துணுக்குகளைப் படித்து, பல செய்திகளைத் தெரிந்து கொண்டேன்.

- எஸ். காயத்ரி, திருநெல்வேலி

அழகு!

'திருநெல்வேலி ஸ்பெஷல்' பகுதியில் இடம் பெற்ற விஷயங்கள் யாவும் என் போன்ற மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. கானகப் பள்ளி

வியந்தேன்!

'பொற்குவியல் எங்கே?' படக்கதை விறுவிறுப்பாக இருந்தது. ஹோசிமின் வாழ்வில் நடந்த சம்பவங்களைப் படித்து வியந்தேன். 'நிலாவுக்குச் சென்று திரும்புங்கள்' விளையாட்டு நன்றாக இருந்தது.

- ஆர். புவனேஸ்வரி, எட்டாம் வகுப்பு, அ.பெ.மே.நி. பள்ளி, ஏர்வாடி.

ஓவியப் போட்டி

'பாம்பு' என்றால் படையும் நடுங்கும் என்பார்கள். ஆனால் பாம்பை வரைவதில் பயம் வேண்டியதில்லையே! இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு : பாம்பு. பாம்பு படமெடுக்கலாம், ஓடலாம், கீரியுடன் சண்டை போடலாம், பாம்பாட்டி முன் நிற்கலாம்... இப்படி எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். படம் வண்ணத்தில் இருப்பது அவசியம்.

சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முகவரியை அவசியம் குறிப்பிடுங்கள்.

கடைசித் தேதி 5.7.2003.

அ. குமார்



ஒரு சிவப்பு மலரும் ஏழு ஊதாப்பூக்களும்

மன்னரொருவர் ஏழு ராணிகளுடன் வாழ்ந்து வந்தார். முதல் ஆறு ராணிகளும் கொடூர குணமுள்ளவர்கள். கடைசி ராணி மட்டும் இயற்கையிலேயே இரக்க சுபாவமும் நல்ல குணமும் கொண்டவள். அதனால் மன்னருக்கு அவள்மீது அக்கறையும் அன்பும் இருந்தது. வருடங்கள் ஓடின. மன்னரின் கவலை மகிழ்ச்சியாக மாறும் வகையில் கடைசி ராணி கர்ப்பமடைந்தாள்.

இந்தச் சந்தோஷச் செய்தியை மக்கள் மத்தியில் வெளியிட்டதோடு, தன்னைப் பார்க்க வருபவர்களுக்குப் பரிசுப் பொருட்களைக் கொடுத்து மகிழ்ச்சியடைந்தார் மன்னர். மூத்த ராணிகள் ஆறு பேருக்கும் இது அதிர்ச்சிக்குரிய செய்தியாக இருந்தது. இளைய ராணி மீது பொறாமைப் பட்டனர். நீளமான தங்கச் சங்கிலி ஒன்றை உருவாக்கிய மன்னர், ஒரு முனையைத் தன்னுடைய இடுப்பில் கட்டிக் கொண்டார். அதன் மற்றொரு முனையைக் கர்ப்பமடைந்துள்ள இளைய ராணியைக் கட்டிக் கொள்ளச் சொன்னார். "ராணிக்கு எப்போது வலியெடுத்து-குழந்தை பிறக்கிறதோ, அந்த நேரத்தில் இந்தச் சங்கிலியைப் பிடித்து இழுங்கள். நான் உடனே வந்து குழந்தையைப் பார்க்க வசதியாக இருக்கும்" என்றார்.

குழந்தை பிறக்கும்போது ராணியையும் குழந்தையையும் கவனிக்கும் பொறுப்பை யார் ஏற்பது என்ற பிரச்னை எழுந்தபோது "என்ன இருந்

வங்காள நாடோடிக் கதை

தாலும் அவளும் எங்களுக்குச் சகோதரி தானே? நாங்கள் ஆறு பேரும் அவளைக் கவனித்துக் கொள்கிறோம்'' என்று மூத்த ராணிகள் சொன்னார்கள். அவர்களுடைய நயவஞ்சகத்தை அறியாத மன்னரும் அதை நம்பினார். நாட்கள் நகர்ந்தன. குழந்தை பிறக்கும் நேரம் நெருங்கியது.


இளையராணியின் பிரசவத்திற்காக விசேஷமாக அமைக்கப்பட்ட அறைக்குள் இருந்த மூத்தராணிகள் வேண்டுமென்றே இளையராணியின் இடுப்பிலிருந்த தங்கச் சங்கிலியைப் பிடித்து இழுத்தனர். அரசவையில் அமர்ந்திருந்த மன்னர் உடனே சந்தோஷமடைந்து அமைச்சர்கள், ஜோதிடர்கள், புரோகிதர்கள், இசைக் கலைஞர்கள் என அனைவரையும் அழைத்துக் கொண்டு, விலை மதிப்புமிக்க நகைகள், பரிசுப் பொருட்களுடன் அவசர அவசரமாக அந்தப்புரத்திற்கு விரைந்தார். ஆனால் அது வேண்டுமென்றே செய்த சைகை அல்லவா? மன்னர் ஏமாற்றமடைந்து அரசவைக்குத் திரும்பினார். இதனால் சந்தோஷமடைந்த மூத்தராணிகள் மீண்டும் தங்கச் சங்கிலியை இழுத்து மன்னரை வரவழைத்



தனர். இரண்டாவது முறையும் ஏமாற்றமடைந்த மன்னருக்குக் கோபம் பொங்கியது.

''குழந்தை பிறப்பதற்கு முன்பே அவசரப்பட்டு இப்படி அடிக்கடி சங்கிலியைப் பிடித்து இழுத்து என்னை ஏமாற்றினால், யாராக இருந்தாலும் அவர்களைச் சிரச்சேதம் செய்யும்படி உத்தரவிடவும் தயங்கமாட்டேன்'' என்று எரிச்சலுடன் சொன்னார் மன்னர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக ஏழு ஆண் குழந்தைகளையும், ஒரு பெண் குழந்தையையும் பெற்றெடுத்தாள் இளைய ராணி. அந்தக் குழந்தைகள் பார்ப்பவர்கள் மனதைக் கவரும் வகையில், அழகாகவும் தெய்வீகக் களையுடனும் இருந்தன. இளைய ராணிக்கு நினைவு வந்தவுடன் தன்னுடைய மூத்தராணிகளைப் பார்த்து, ''குழந்தைகளை என்னிடம் காட்ட மாட்டீர்களா?'' என்று ஆவலுடன் கேட்டாள்.



ஏற்கெனவே பொறாமையில் இருந்த அவர்கள் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு, ''குழந்தைகளா? உனக்கென்ன குழந்தைகள் பெற்றுக் கொண்டதாக எண்ணமா? உனக்குப் பிறந்தவையெல்லாம் வெறும் எலிகளும் நண்டுகளும் தான்'' என்று ஏளனமாகச் சொன்னார்கள். இதைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்த இளையராணி மயக்கமடைந்தாள். அவர்கள் சங்கிலியைக் கூடப் பிடித்து இழுக்காமல் பெரிய மண் பானையொன்றைக் கொண்டுவரச் சொல்லி, அதனுள் அந்தக் குழந்தைகளை வைத்து மூடி, குப்பைகளைக் கொட்டி வைத்திருந்த அரண்மனைத் தோட்டத்து மூலையில் பள்ளம் தோண்டிப் புதைத்துவிட்டனர். அதன் பின்னரே தங்கச் சங்கிலியை இழுத்து மன்னரை வர

வழைத்தனர்.

இந்த முறையும் மன்னர் வழக்கம்போல் எல்லோரையும் அழைத்துக் கொண்டு மகிழ்ச்சியோடு விரைந்து வந்தார். மயக்கமடைந்திருந்த இளையராணியைப் பார்த்து ஒன்றும் புரியாமல் திகைத்தார். மூத்தராணிகளோ 'இவள் பெற்றெடுத்ததுதான் இவை' என்று சொல்லி, சில எலிகளையும் நண்டுகளையும் காண்பித்தனர். தன்னுடைய ஆசை நிராசையானதை உணர்ந்த மன்னர், கோபமடைந்து சற்றும் யோசிக்காமல், இளைய ராணியை அரண்மனையிலிருந்து வெளியேற்றும்படி உத்தரவிட்டார்.

அரண்மனையைவிட்டு வெளியேற்றப்பட்ட இளையராணி, தங்குவதற்கு இடமின்றி பிச்சைக்காரி போல் சுற்றத் தொடங்கினாள். அவளுடைய இந்தப் பரிதாப நிலைமையைப் பார்த்து இயற்கையே சீற்றம் கொண்டதுபோல் மரங்கள் பட்டுப் போயின. மழையின்றி பசுமை மறைந்தன. நதிகள் வற்றின. நாட்கள் செல்லச் செல்ல அரண்மனைக்குள்ளும் சோகம் குடியேறத் தொடங்கியது. மகிழ்ச்சியே இல்லை. மனமுடைந்து போன மன்னர், தினமும் இறைவழிபாட்டிலாவது மனதைச் செலுத்த எண்ணி தோட்டத்திலிருந்து மலர்களைப் பறித்து வரச் சொன்னார். நாடு முழுவதும் வறட்சியாக இருக்கும்போது தோட்டத்தில் மட்டும் எப்படி மலர்கள் பூக்கும்?

ஆனால் அரண்மனைத் தோட்டத்தில், மூலையில் இருந்த குப்பைமேட்டின் மேலிருந்த மரத்தில் மட்டும் அதிசயத்தக்க வகையில் பார்ப்பவர் மனதைக் கவரும் ஊதா வண்ணத்தில் ஏழு மலர்களும், தேவலோகத்திற்கே உரிய சிவப்பு மலரொன்றும் பூத்திருந்தன. இதைக் கண்ட தோட்டக்காரன் ஓடிச் சென்று மன்னரிடம் விஷயத்தைச் சொன்னான். பூஜைக்காக அந்த மலர்களை உடனே பறித்து வரும்படி உத்தரவிட்டார் மன்னர்.

தோட்டக்காரன் மலர்களைப் பறிக்க பரபரப்புடன் விரைந்து வருவதைப் பார்த்த சிவப்பு மலர், ''என்னருமை சகோதரர்களான ஊதா மலர்களே, விழித்தெழுங்கள்'' என்று குரல் கொடுத்தது. ''அருமை சகோதரி சிவப்பு மலரே, எதற்காக எங்களை அவசரத்துடன் அழைத்தாய்?'' என்று பதிலுக்குக் கேட்டன ஊதாப்பூக்கள்.


''நம்மைப் பறிப்பதற்காக மன்னர் அனுப்பிய தோட்டக்காரன் வந்து கொண்டிருக்கிறான். அவனிடம் நம்மைப் பறி கொடுக்க வேண்டுமா? பதில் சொல்லுங்கள்'' என்று கேட்டது சிவப்பு மலர். ''வேண்டாம். நாம் அனைவருமே அவனுடைய கைகளுக்குப் பிடிபடக் கூடாது. அவன் கைக்கு எட்டாத உயரத்திற்கு இன்னும் கொஞ்சம் மேலே போய்விடலாம்.'' என்று ஒருமித்த குரலில் சொன்ன ஊதாப்பூக்கள், சட்டென்று சிவப்பு மலருடன் மேலே உயர்ந்தன.

இந்த அதிசயத்தைக் கண்ட தோட்டக்காரன் பயந்து போய் கையில் கொண்டு வந்த பூக்கூடையைக் கீழே போட்டுவிட்டு அரண்மனைக்குள் ஓடிச் சென்று விஷயத்தைச் சொன்னான். அவன் சொன்னதைக் கேட்டு நம்ப முடியாமல் குழப்பத்துடன் தோட்டத்திற்கு வந்த மன்னரை சிவப்பு மலர் பார்த்தது. ''என்னருமை ஊதாப்பூ சகோதரர்களே, மன்னரே இப்போது இங்கே

கப்பல் படையைக் குறிக்கும் 'நேவி' என்னும் சொல் 'நேவிஸ்' என்ற லத்தீன் சொல்லிலிருந்து வந்தது.

- பி.கவிதா, வேலூர்

★ கங்கையும் யமுனையும் அலகாபாத்தில் சங்கமமாகின்றன.




வந்திருக்கிறார். நம்மைப் பறி கொடுக்க வேண்டுமா? வேண்டாமா?'' என்று கேட்டது சிவப்பு மலர்.

இந்த முறையும் ஊதாப்பூக்கள் ஒருமித்த குரலில் மறுத்தன. மன்னரின் கைகளுக்கும் பிடிபடாமல் இன்னும் உயரத்திற்குச் சென்றன. அரசர் ஆச்சரியமடைந்தார். மூத்த ராணியும் வந்தாள். அப்போதும் அந்த மலர்கள் அவளுடைய கைகளுக்குப் பிடிபடாமல் மேலே சென்றன. இப்படியே அடுத்தடுத்து வந்த ராணிகளின் கைகளுக்கும் பிடிபடாமல் அந்த மலர்கள் உயரத்திற்குச் சென்றுவிட்டன. மேலே செல்லச் செல்ல அந்த மலர்கள் நட்சத்திரங்கள் போல் பிரகாசிக்கத் தொடங்கின. என்ன செய்வதென்று புரியாத மன்னர் மனமொடிந்த நிலையில், 'ஒரு வேளை நம்மால் துரத்தியடிக்கப்பட்ட இளையராணி வந்தால் இந்த மலர்களைப் பறிக்க முடியுமா, பார்க்கலாம்' என்று கருதி, காவலாளிகளைக் கூப்பிட்டு எங்கிருந்தாலும் இளையராணியைக் கண்டு பிடித்து அழைத்து வரும்படி உத்தரவிட்டார்.

அந்த ஏழு ஊதாப்பூக்களும் சிவப்பு மலரும் இந்தக் கட்டளையைத்தான் எதிர்பார்த்ததுபோல் காத்திருந்தன. "அருமைச் சகோதரர்களே, இப்போதாவது சொல்லுங்கள். இளையராணி வந்தால் மலர்களைப் பறிக்க அனுமதிக்கலாமா? வேண்டாமா?'' என்று சிவப்பு மலர் கேட்டது. ''என்னருமை சகோதரியே, முதலில் இளைய ராணி வரட்டும் பார்க்கலாம்'' என்று ஊதாப்பூக்கள் சொல்லின.

நகரம் முழுவதும் சுற்றியலைந்த காவலாளிகள், கடைசியாகப் பிச்சைக்காரி போல் திரிந்து கொண்டிருந்த இளைய ராணியைக் கண்டுபிடித்து அரண்மனைத் தோட்டத்திற்கு அழைத்து வந்து மன்னர் முன்பு நிறுத்தினார்கள். அவளைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது.

மன்னரின் உத்தரவுப்படி மரத்தினடியில் சென்று மலர்களைப் பறிக்க கைகளை உயர்த்தினாள் இளையராணி. என்ன ஆச்சரியம்! அவளைப் பார்த்த உடனே அந்த



உயிருள்ள எரிமலைகள் 850 இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றுள் பெரும்பாலானவை கடலுக்குள் இருப்பவை. இந்தோனேஷியாவில் மட்டுமே 167 எரிமலைகள் உள்ளன.

- ஆர். பிரகாசம், மருதாடு

ஏழு ஊதாப்பூக்களும் சிவப்பு மலரும் படபடவென்று கீழ் மட்டத்திற்கு வந்தன. வந்ததோடு மட்டுமன்றி, அழகான ஏழு இளைஞர்களாக உருவம் பெற்றனர். சிவப்பு மலரும் அழகு தேவதைபோல் இளவரசியாக உருவம் பெற்றாள். இளைய ராணியைச் சுற்றி நின்று கட்டியணைத்தபடி ''அம்மா... அம்மா...'' என்று அன்புடன் ஆனந்த கண்ணீர் வடித்தனர். 'என்ன ஓர் அபூர்வமான மனதை நெகிழ வைக்கும் காட்சி' என எல்லோரும் பிரமித்துப் போய் நின்றனர். அப்போதுதான் நடந்த விஷயங்கள் அனைத்தும் மன்னருக்குத் தெரிய வந்தது. செய்வதறியாது திகைத்து நின்ற மூத்த ராணிகள் பயத்துடன் நகரத் தொடங்கினார்கள். அவர்களைப் பிடித்து சிறையில் அடைக்கும்படி உத்தரவிட்டார் மன்னர். பின்னர் தன்னுடைய தவறுக்கு வருந்தி இளையராணியையும் தன் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு அரண்மனைக்குள் சென்றார். நீண்ட காலத்திற்குப் பிறகு வெற்றி முழக்கமும் மகிழ்ச்சி ஆரவாரமும் மீண்டும் அங்கு ஒலிக்கத் தொடங்கின. ●

* மாம்பழத்தில் வைட்டமின் ஏ உயிர்ச் சத்து உள்ளது.

சின்னியை அடையுங்கள்!



சிலந்தியின் வாழ்க்கை, மிகுந்த ஆபத்துகளைக் கொண்டது.

சின்னி சிலந்தி பத்திரமாக வலையின் மையத்திற்குச் சென்று விட்டது. உங்களுடன் ஒன்று அல்லது இரண்டு நண்பர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். இப்போது நீங்களும் குட்டி சிலந்திகள்தான். சின்னி சிலந்தியை அடைவதுதான் விளையாட்டு. நீங்கள் நினைப்பதுபோல் சின்னியை அடைவது அவ்வளவு சுலபமல்ல. ஆளுக்கொரு வண்ண பட்டன்களை எடுத்துக் கொள்ளுங்கள்.

பகடையைக் கொண்டு தாயம் போட்டு ஆரம்பியுங்கள்.

எப்படி விளையாடுவது?



ஈ இருக்கிறது. முன்னோக்கி ஒரு வட்டத்துக்குச் செல்லுங்கள்.



பெரிய ஆபத்து. கழுகுக்கு இரையாகப் போகிறீர்கள். மீண்டும் விளையாட்டை ஆரம்பியுங்கள்.



பலத்த மழை, அதனால் வலை பாதிக்கப்பட்டுவிட்டது. இரண்டு ஆட்டம் கிடையாது.



பயங்கர காற்று வீசுகிறது. ஒரு வட்டம் பின்னோக்கிச் செல்லவும்.



வலை பிய்ந்து விட்டது. ஓர் ஆட்டம் தவிர்க்கவும்.



குப்பைத் தொட்டியில் ஈக்கள் மொய்க்கின்றன. நல்ல உணவைத் தேடிச் செல்லவும். மறுபடியும் நீங்களே ஆட்டத்தைத் தொடரவும்.



குளவி குறுக்கே வந்து விட்டது. 1, 2 விழுந்தால் முன்னோக்கிச் செல்லவும். 3, 4, 5, 6 விழுந்தால் மீண்டும் துவக்கத்திலிருந்து விளையாடவும்




வெயில் அடிக்கிறது. ஏகப்பட்ட பூச்சிகள் வலை நோக்கி வருகின்றன. அருமையான நாள்! நீங்களே இன்னொரு ஆட்டம் ஆடலாம்.

யார் முதலில் சின்னியை அடைகிறாரோ அவரே வெற்றி பெற்றவர்.

படம் : **லலிதா**

நன்றி : Bugs!


ஆரம்பம்

டாக்டர் கு. கணேசன்



சார்ஸ் என்றால் என்ன?

● வ. கலைவாணி,
சென்னை - 80

● கு. பெருமாள்சாமி,
நாகர்கோயில்

? இன்று உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் 'சார்ஸ் நோய்' பற்றி சொல்லுங்கள், டாக்டர்!

! 'Severe Acute Respiratory Syndrome' என்பதன் சுருக்கம் சார்ஸ் (SARS) என்று அழைக்கப்படுகிறது. இது நம் சுவாச மண்டலத்தைத் தாக்கும் கடுமையான வைரஸ் நோய். இவ்வருடம் சீனாவில் 'குவாங் டாங்' எனும் மாவட்டத்தில் முதன்முதலில் இது தோன்றியது. 'கொரானா வைரஸ்' இந்த நோயை உண்டாக்குகிறது. நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் இருமும்போது இக்கிருமிகள் சளியில் வெளிவந்து, காற்றில் கலந்து அருகில் இருப்பவரைத் தாக்குகின்றன. தொடர்ந்து மூன்று நாட்களுக்குக் காய்ச்சல், தலைவலி, வறட்டு இருமல் ஆகியவை இந்நோயின் ஆரம்ப அறிகுறிகள். பிறகு சுவாசிப்பதில் சிரமம், நெஞ்சு அடைத்தல், மயக்கம் ஏற்படுவது போன்ற மோசமான விளைவுகள் உண்டாகின்றன. இந்நோய்க்கான சரியான சிகிச்சை முறை இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. நோயாளியைத் தனிமைப்படுத்துவதன் மூலம் இந்நோய் பிறருக்குப் பரவாமல் தடுக்கலாம். சார்ஸ் பரவியுள்ள பகுதிகளில் பொதுமக்களும் மருத்துவமனைப் பணியாளர்களும் முகத்தில் 'மாஸ்க்' கட்டிக் கொள்ள வேண்டியது அவசியம்.

● தி.சே. அறிவழகன்,
திருப்புலிவனம்

? புற்றுநோய் என்றால் என்ன? இதைத் தடுக்க முடியுமா?

! புற்றுநோய் என்பது நம் உடல் அணுக்களின் அபரிமிதமான வளர்ச்சியாகும். இது பெரும்பாலும் திடீரெனத் தோன்றும். உடலில் எங்குவேண்டுமானாலும் இந்த நோய் ஏற்படலாம். நல்ல நிலைமையில் உள்ள திசுக்களையும் அவற்றின் அருகில் உள்ள உறுப்புகளையும் இது பாதிக்கும். துவக்க நிலையில் இந்த நோயைக்

கண்டறிந்துவிட்டால், மருத்துவச் சிகிச்சை, நுண்கதிர் சிகிச்சை, அறுவை சிகிச்சை என்று பல வழிகளால் இதைக் குணப்படுத்த முடியும். புகை பிடிப்பதை நிறுத்தினால் நுரையீரல் புற்றுநோயைத் தடுக்கலாம். மூக்குப்பொடி, பான்மசாலா, பாக்கு மற்றும் புகையிலை போடுவதைத் தவிர்த்தால் முறையே மூக்கு, வாய், தொண்டை குரல் வளைப் புற்றுநோய்களைத் தடுக்க முடியும். கொழுப்பு உணவுகளை அளவோடு சாப்பிட்டால் பெருங்குடல் புற்று நோயைத் தடுக்கலாம். மதுவை மறந்தால் இரைப்பை மற்றும் கல்லீரல் புற்று நோயைத் தடுக்கலாம்.

● ஆ. திவ்யா, திருப்பத்தூர்.

? மச்சங்கள் தோன்றுவது எப்படி? அவற்றால் ஏதேனும் ஆபத்து வருமா? சிகிச்சை என்ன?

! தோலுக்கு நிறமளிப்பவை 'மெலனின்' எனும் நிறமிகள். அந்த மெலனின் நிறமிகள் தோலில் ஓர் இடத்தில் கொத்தாகச் சேர்ந்து கொள்ளும்போது மச்சங்கள் தோன்றுகின்றன. இவை பெரும்பாலும் பிறவியிலேயே உண்டாகிவிடும். வளரும்போது நன்றாகத் தெரியத் தொடங்கும். சராசரியாக ஒருவர் உடலில் 20லிருந்து 30 மச்சங்கள் இருக்க வாய்ப்புண்டு. மச்சங்களால் பொதுவாக ஆபத்தில்லை. என்றாலும் சில வகை மச்சங்கள் புற்றுநோயாக மாறக் கூடியவை. மச்சம் திடீரென அளவில் பெரிதாவது, அதன் நிறம் மாறுவது, புண்ணாவது, அதில் ரத்தம் வருவது போன்ற அறிகுறிகள் தெரிந்தால், உடனடியாக மருத்துவரைக் கலந்து ஆலோசிக்க வேண்டும். சாதாரணமான சிறிய மச்சங்களுக்குச் சிகிச்சை தேவையில்லை.

● சா. செல்வராஜன், திருப்பூர்.

? காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் தண்ணீர் அருந்துவது நல்லதா?

! நல்லதுதான். காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் 2 தம்ளர் தண்ணீர் அருந்துவது நல்லது. காரணம், நாம் உறங்கும்போதுகூட இரைப்பையில் சிறிதளவு அமிலம் சுரந்து கொண்டிருக்கும். வெறும் வயிற்றில் தண்ணீர் அருந்தும்போது இந்த அமிலம் நீர்த்துவிடும். அல்சர் எனப்படும் வயிற்றுப்புண் வராது. மேலும் இரவில் உணவு செரிமானமாகி முடிந்ததும் சில வாயுக்கள் உற்பத்தியாகி, இரைப்பை மற்றும் குடல் பகுதிகளில் தேங்கியிருக்கும். இவ்வாயுக்கள் தண்ணீரில் கரைந்துவிடும். மலச்சிக்கல் ஏற்படாது. அதற்காக லிட்டர் கணக்கில் தண்ணீர் அருந்துவதும் கூடாது. எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

புதிர் இங்கே! விடை கீழே!

1. உடலின் எரிபொருள் எது?
   அ. மாவுச்சத்து
   ஆ. புரதச்சத்து
   இ. கொழுப்புச் சத்து

2. சூயிங்கத்தில் உள்ள வேதிப் பொருள் எது?
   அ. சாக்கிரின்
   ஆ. சைலிட்டால்
   இ. சுக்ரோஸ்

3. தோலில் மருக்கள் உருவாக எது காரணம்?
   அ. வைரஸ்
   ஆ. பாக்டீரியா
   இ. காளான்

4. மாமிச உணவில் எந்தச் சத்து இல்லை?
   அ. பாஸ்பரஸ்
   ஆ. வைட்டமின் பி12
   இ. நார்ச்சத்து


5. இரத்தச் சிவப்பணுக்களின் சராசரி ஆயுட்காலம் எவ்வளவு?
   அ. 100 நாட்கள்
   ஆ. 120 நாட்கள்
   இ. 150 நாட்கள்.

1. அ 2. ஆ 3. அ 4. இ 5. ஆ


விடை இங்கே!




விஞ்ஞானி கடத்தல்!
3
கதை, படம் : முத்து
ஜானு, கடத்தல்காரர்கள் பணத்துக்காகத் தாத்தாவைக் கடத்தியிருப்பார்களோ?
இல்லை மாமா. அதைவிட தாத்தாவோட கண்டுபிடிப்புதான் அவங்களுக்குத் தேவையா இருக்கும்ன்னு தோணுது.
அவரைச் சித்திரவதை செய்து உண்மையை வரவழைப்பாங்கன்னு நினைக்கிறேன்.
சே! விஷயம் ரொம்ப சிக்கலா இருக்கே.
கடத்தல்காரர்களுக்குப் பயன்படற ஏதோ ஒரு விஷயத்தை தாத்தா கண்டுபிடிச்சிருக்கார்...
ரகு சொல்றதும் சரிதான்.
ஜோ, அவரோட கண்டுபிடிப்பைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?


தெரியாது சார். ரொம்ப ரகசியமா வச்சிருந்தார். நேற்று ரொம்ப சந்தோஷமாகூட இருந்தார்.
சரி, தயாராகுங்க. இன்னும் கால் மணி நேரத்தில் நாம கிளம்பணும்.
சரி மாமா.
ஹெலிகாப்டரில் போனவங்களை நாம் இந்த டப்பா ஜீப்பில் எப்படி பிடிக்க முடியும்?
இது டப்பா ஜீப்பா இருந் தாலும் பல சிறப்புகளைக் கொண்டது. உங்களுக்கு ரொம்ப உதவியா இருக்கும்.
அவர்கள் கிளம்பினர்.
ஜானு, இங்கே ஒரு பை இருக்கு.
இதை ஏன் தாத்தா இங்கே வச்சிருக்கார்?


பையைத் திறந்தாள் ஜானு.
ஒரு பிஸ்டல், மாத்திரை டப்பா, நான்கு ஸி.டி.கள்...
பிஸ்டல் எல்லாம் இருக்கா?
பத்திரமா அதை வை. நமக்குத் தேவைப்படும்.
இதற்கிடையே கடத்தல்காரர்களு டன் விஞ்ஞானி நடந்து கொண் டிருந்தார்.
இந்த ஓட்டை ஹெலி காப்டரைக் கொடுத்து நம் உயிரை வாங்கறார் பாஸ்.
கவலைப்படாதே! இந்தத் தாத்தாவை ஒப்படைத்து விட்டு ஒரு நல்ல தொகை வாங்கிடலாம்.
என்னால நடக்க முடியலை.
எங்களாலும்தான் நடக்க முடியலை.
ஹலோ! பாஸ், ஹெலிகாப்டர் கோளாறா யிடுச்சு. நடந்துகிட்டு இருக்கோம். வேறொரு ஹெலிகாப்டர் அனுப்பி வைங்க.


அங்கே ஒரு மலை கிராமம் இருக்கு. வந்து தங்குங்க. நான் வண்டி அனுப்புறேன்.
ஓ.கே. பாஸ்.
அதே நேரம் -
ஜானு, அங்கே பாரேன், யானைகளை...
ஆஹா!
அப்போது ஜீப்பைத் திடீரென நிறுத்தினார் ஆகாஷ்.
என்ன மாமா?
அங்கே பார்.
மாமா, எனக்குப் பயமா இருக்கு.
இப்ப என்ன பண்றது? இறங்கி ஓடிடலாமா?
அதுதான் ரொம்ப ஆபத்து.
யானை ஜீப்பை நோக்கி வர, மூவரும் பயத்தில் உறைந்தனர்.
தொடரும்



மணம் வீசும்

● மிகவும் குறைந்த நேரம் மலரும் பூ பார்லிப் பூ. மலர்ந்த 3 நிமிடங்களில் வாடிவிடும்.

● அத்திப்பூ எப்போதுமே விரிவது இல்லை.

● தண்ணீரில் மலரும் பூ தெரியும். வெந்நீரில் பூ மலருமா? மலர்கிறது. ஹங்கேரி நாட்டில் உள்ள வெந்நீர் ஊற்றுச் சுனைகளில் ஒருவகை அல்லிப் பூ மலர்ந்து மணம் பரப்புகிறது!

● இலுப்பைப் பூ மலர்வதற்குப் பத்தாண்டுகள் ஆகும். ஒரு மரத்தில் சுமார் நூறு கிலோ மலர் பூக்கும். இது ரசமுள்ளதாகவும், தின்பதற்கு இனிப்பாகவும் இருக்கும். ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை என்று கூறுவது இதனால் தான். இதில் அறுபது சதவீதம் சர்க்கரை உள்ளது.

● வேங்கை மலரில் வண்டு மொய்க்காது.

● சிறந்த மருத்துவப் பொருளாகப் பயன்படும் கருவாப்பட்டைச் செடியின் பூ, கிராம்பு அல்லது இலவங்கம் எனப்படும்.

● உலகத்திலேயே மிகப் பெரிய மலர் சுமத்ரா, ஜாவா தீவுகளில் காணப்படும் சிவப்பு நிற ராஃப்ளஷ்யா. 7 சதுர அடி பரப்பும், 15 கிலோ எடையும் கொண்டது.

● உலகத்தில் மிக உயரமான மலரும் சுமத்ரா, ஜாவா தீவுகளிலேயே இருக்கிறது. 'அமோர்போ பாலஸ்' என்பது இதன் பெயர். முழு வளர்ச்சி பெற்ற மலரின் உயரம் 2 மீட்டருக்கு மேல் இருக்கும். இம் மலரின் துர்நாற்றம் சகிக்க முடியாது.

● 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலரைப் போல பிலிப்பைன்ஸ் நாட்டில் 15 ஆண்டுகளுக்கொரு முறை



மலர்கள்!



வயலட் வண்ணமுடைய 'லிம்பா' என்னும் மலர் மலர்கிறது.

● இந்து மகாக் கடலில் அமைந்துள்ள ரீயூனியன் தீவில் காக்டஸ் என்ற பெயருடைய பூ, 50 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் பூக்கிறது.

● பாம்பூசாய்டு இன மூங்கில்கள், 120 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் பூக்கின்றன. இதில் ஒரு விந்தை என்னவெனில், உலகம் முழுவதிலும் இந்த இனம் ஒரே காலத்தில் பூக்கிறது. கடைசியாக 1960 களின் இறுதியில் பாம்பூசாய்டு இன மூங்கில்கள் பூத்தன.

● சூரியகாந்திப் பூக்கள் சூரியனை நோக்கியே திரும்புவது ஒளிச் சார்பினாலாகும். தாவரத்தின் தண்டானது ஒளிச் சார்பினால் ஒளியை நோக்கியே வளரும். ஆனால், வேர்கள் அதற்கு எதிராகவே வளரும்.

- என். ஜரினா பானு

1000/- ரூபாய் பரிசு!

மீண்டும் பள்ளி திறந்துவிட்டது. புதுப் புத்தகம், நோட்டு, யூனிஃபார்ம் என்று நிறைய செலவுகள் உங்களுக்கு இருக்கும். அந்தச் செலவுகளுக்குப் பயன்படும் வகையில் இந்தப் போட்டி நடத்தப்படுகிறது. சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுதி, பெற்றோர் கையொப்பத்துடன், முகவரி கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். பள்ளி, வீட்டு முகவரிகளை மறக்காமல்



குறிப்பிடுங்கள். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி 20.7.2003.

இந்த மாதப் போட்டி


பொருத்துக :

1. ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன் - ஹோசி மின்
2. உலகிலேயே மிகப் பெரிய மருதி - நைல் நதி
3. வியட்நாம் - லாகூர்
4. எகிப்து - ஜெனிவா
5. தலைமை உலகச் சுகாதார நிறுவனம் - டென்மார்க்
6. கொசு - மலேரியா
7. கவர்ச்சியான அழகு வில், அம்பு இல்லா அதிசய வில் - அது என்ன வில்?
8. மேலே உள்ள படத்தில் இருப்பது யார்?

ஆசிரியர்
கோகுலம்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 97.



கொ.மா.கோதண்டம்



குளு குளு குருவிக் கூடு

அந்த மாணவர்கள் மலையடிவார பேயன்பாறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ஆதிவாசிச் சிறுவன் நீலன் ஓடும் தண்ணீரைப் பார்த்துக் கொண்டிருந்தான். மரங்கள் அடர்ந்திருந்ததால் பறவை, விலங்குகளின் பல்வேறு ஓசைகள் தூரத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்தன.

மாணவர்கள் வீடுகளில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் நண்பர்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். ஆளுக்கு இரண்டு கடலை மிட்டாய்களைத் தந்து கொண்டிருந்த இளங்கோ, நீலனிடம் தரும்போது,

"என்னப்பா நீலா, தனியா உட்கார்ந்து எதையோ பார்த்துக் கிட்டிருக்கியே என்ன?" என்றான்.

"சாமி, நான் சொல்றேன்னு கோவிச்சிக்கக் கூடாது"

நீலன் சொல்லும்போது எல்லோரும் அவனருகில் வந்து விட்டார்கள்.

"என்னப்பா சொல்லப் போற?"

"அதோ போகுது பாருங்க, அது என்ன?"

"அது நத்தைப்பா, எதுக்கு கேக்குறே?" என்றான் அமுதன்.

"அது முதுகுல சுமந்துகிட்டுப் போறது?"

"அது அதன் கூடு"

"ஆமாம், அது தான் அதுக்கு வீடு, எங்க போனாலும் அதைத் தூக்கிட்டுத்தான் போகும்"

"சரி இப்ப அதுக்கு என்ன?" என்றான் மணி.

"சாமி, இப்ப நீங்க வனத்துக்கு வந்திருக்கீங்க. அந்த அணிலைப் பாருங்க. சத்தத்துக்கு ஏற்ப பின்னால வால் மரக்கிளையில தாளம் போடுது. அந்தக் கிளையில் பாருங்க, ஓணான் தலையத் தலைய ஆட்டுது. நம்மள வாங்க வாங்கன்னு அழைக்கிறது மாதிரி இருக்கில்ல. கிளிகளைப் பாருங்க, ரொம்ப நல்லா இருக்குது. அந்தச்



செடிகள்ல பூக்களைப் பாருங்க, இந்தக் கொடிகள்ல இலைகளைப் பாருங்க, ஓடைத் தண்ணியில சருகுகள் இழுத்துக்கிட்டு வருது பாருங்க. எல்லாம் அழகழகா இருக்குது இல்ல!"

"சரிப்பா, முதல்ல நத்தையக் காட்டுனே, இப்ப ரசிக்கிற காட்சிகளைச் சொல்றே, அதுக்கும் இதுக்கும் என்னப்பா சம்பந்தம்?'' என்று கேட்டான் மணி.

"எனக்குப் புரியுது'' என்றான் கண்ணன்.

"என்ன புரியுது?''

''வந்த இடத்திலே அழகை ரசிக்காமல் எங்கே போனாலும் முதுகுல வீட்டைச் சுமந்திட்டுப் போகிற நத்தை மாதிரி, வீட்டு விஷயங்களை மனசுல வச்சிக்கிட்டு பேசிக்கிட்டு இருக்கீங்களேன்னு நீலன் சொல்ல வர்றான்.''

"உண்மையை நல்ல உவமையோட அழகாச் சொல்லிட்டானே நீலன்'' என்று பாராட்டினான் இளங்கோ.

"இதெல்லாம் நமக்குத் தெரியாதாக்கும்! ஒரு காட்டுப் பயதான் நமக்குச் சொல்லிக் கொடுக்கணுமாக்கும்'' கோபமுடன் பேசினான் மணி.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் என்று ஐயன் திருவள்ளுவர் சொல்லியிருக்காரே, அதனால சொல்லுறது யாருன்னு பார்க்காதேன்னு அர்த்தம் தானே'' என்றான் அமுதன்.

"எல்லாரும் ஒண்ணுன்னா நாம படிச்சி என்ன பிரயோஜனம்?''

"மணி படிச்சதால மட்டும் ஒருவனுக்குக் கெட்டிக்காரத்தனம் வந்து விடுமென்றோ, படிக்காததால மட்டும் ஒருவன் மட்டம்னோ சொல்ல முடியாதுப்பா'' என்றான் கண்ணன்.

"எப்படி சொல்றே?'' என்றான் மணி.

"உதாரணமா இந்தக் குருவிக் கூடு இருக்குப் பாரு. இதை மாதிரி எந்த ஒரு இஞ்சினியராலும்கூட கட்ட முடியாதுன்னு ஒரு பெரியவர் எங்கிட்ட சொன்னாருப்பா'' என்றான் கண்ணன்.

"சரி, சரி வாங்கப்பா. அருவிக்குக் குளிக்கப் போவோம். இன்னிக்கி ஒரே விவாதமா போயிக்கிட்டு இருக்கு. சரி



"வாப்பா நீலா, அருவிப் பாதையில முதல்ல போப்பா" என்று அகிலன் கூறியதும் எல்லோரும் எழுந்தார்கள்.

அவர்கள் ஒற்றையடிப் பாதை வழியே நடந்தார்கள். மரங்களின் மேல் குரங்குகள் காச்மூச்செனக் கத்தியவாறு தாவித் தாவி ஓடிக் கொண்டிருந்தன. அவை சென்ற கிளைகளிலிருந்து சிறு சிறு பழங்கள் உதிர்ந்து விழுந்தன. இவர்கள் அவற்றை எடுத்துத் தின்றபடி சென்றனர்.

பாதையில் ஒரு மரத்தில் விழுதுகள் தொங்கிக் கொண்டிருந்தன. ஆளுக்கொன்றில் ஏறி உட்கார்ந்து ஊஞ்சலாடினார்கள். அவர்கள் இறங்கியதும் மற்றவர்கள் ஏறி ஆடினார்கள்.

"சாமி, எறங்குங்க உடனே" என்று அவசரப்படுத்தினான் நீலன்.

"என்னப்பா?"

"சாமி, கிளை வழியே ஒரு பாம்பு வருது." அவர்கள் வேகமாகக் குதித்தார்கள். கிளை வழியே வந்த பெரிய மலைப் பாம்பு ஒன்று, கிளை முடிந்த இடத்தில் உரசிக் கொண்டிருந்த அடுத்த மரக் கிளையில் ஊர்ந்து சென்றது.

"என்னப்பா அந்தப் பாம்பைக் கல்லால அடிக்கலாமா?" என்றான் மணி.

"சாமி, வனத்துக்குள்ளே எதையும் அடிக்கக் கூடாது. இது அதுங்களோட இடம். சரி வாங்க, அருவிக்குக் குளிக்கப் போகலாம்" என்றான் நீலன்.

சிறிது நேரத்தில் அருவிப் பக்கம் வந்ததும் அவர்கள் ஆற்றில் மிதந்தும் நீந்தியும் அருவியில் நின்றும் குளித்தார்கள்.

பூங்குன்றன் நீரில் நின்றபடி இரண்டு கைகளையும் நீருக்குள் வைத்து இணைத்து இரண்டு பெருவிரல்களுக்கிடையில் தண்ணீரைப் பீய்ச்சியடித்தான். மற்றவர்கள் அதுபோல செய்ய முயன்று இயலாமல் போனதால், அவனையே வியந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

குளித்து முடித்ததும் அவர்கள் எழுந்து ஒரு பாறையில் அமர்ந்து, உணவுப் பொட்டலங்களை ஆளுக்கு ஒன்றாய் எடுத்துச் சாப்பிட்டார்கள். நீலன் தனக்குக் கிடைத்ததைப் பிரித்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

பக்கத்துப் பாறையில் வெளியூரிலிருந்து வந்த பள்ளி மாணவர்கள் உணவுகளைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். பெரிய பாத்திரங்களில் கொண்டு வந்திருந்த உணவுகளைச் சிலர் பரிமாறிக் கொண்டிருந்தார்கள். ஆசிரியர் அவர்களைக் கண்காணித்துக் கொண்டு அமர்ந்திருந்தார். இவர்கள் உண்டு முடித்து விட்டு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

"நீலா, ஏதாவது பேசுப்பா" என்றான் பூங்குன்றன்.

"சாமி எங்க மலை சனங்களுக்கு ரொம்ப பேருக்கு இருக்க குடிசைகள் இல்லே. இருக்கிற குடிசைகளில் விளக்குகளும் இல்லே சாமி"

"ஆமாம், மேல சொல்லு"

"அந்த மரத்தைப் பாருங்க. எத்தனை குருவிக் கூடுகள் இருக்கு! ஒரு குருவிக்குக்கூட கூடு இல்லாமல் இருக்கா?"

"சொல்லுப்பா, சின்னச் சின்ன குருவிகளுக்குக்கூட குடியிருக்க வீடுகள் இருக்கு. ஆறு அறிவு படைத்த மனிதர்கள் பலருக்கு வீடுகள் இல்லே. அதுதானே சொல்ல வந்தே."


"சாமி, இந்தக் குருவி, குஞ்சு பொறிச்ச

பொதுவாக மலைப் பாம்புகள் 8-60 முட்டைகள் இடும். ஆனால் இந்தோனேஷிய மிருகக் காட்சி சாலையில் மலைப்பாம்பொன்று ஒரே நேரத்தில் 124 முட்டைகளிட்டு கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

- நெ. இராமன், சென்னை



* மன்னார்குடாவில் வைகை நதி கலக்கிறது



சமயங்கள்ல, ராவுல இருட்டுல குஞ்சுக பயப்படுமுன்னு நெனச்சி களி மண்ணைக் கொஞ்சம் எடுத்து கூட்டுல வைக்கும், பறந்து போயி மின்மினிப் பூச்சிகளப் புடிச்சிட்டு வந்து, மொதல்ல வச்ச களி மண்ணுல போயி பூச்சிய பதிச்சி வச்சிடும். ராவுல அந்த வெளிச்சத்துல குஞ்சுக தூங்கும்."

"அட அற்புதமான செய்தியில்லே, குருவிக்கூடுகள்ள விளக்கு வைக்கிற செய்தி" பாராட்டிப் பேசினான் இளங்கோ.

அப்போது அடுத்த பாறையின் பக்கத்திலிருந்து ஒருவர் வந்தார்.

"தம்பி, நீதான் நீலனா? நான் பள்ளிக்கூட ஆசிரியரா இருக்கேன். பையங்கள அருவி பார்க்கக் கூட்டிட்டு வந்தேன். இப்ப நீ சொன்ன விஷயத்தைக் கேட்டேன். நான் படிச்சப் பாடல் ஞாபகத்துக்கு வந்தது!"

"அதைச் சொல்லுங்க சார்" என்றனர் மாணவர்கள்.

"கன்னலெனும் சிறு குருவி
கன மழைக் காற்றாமல்
மின்னலெனும் புழுவெடுத்து
விளக்கேற்றும் கார் காலம்

இது மழைக் கால இரவு பற்றிய பாடல். இதுல குருவி பூச்சிய விளக்கா வைக்குமுன்னு சொல்லுது. இந்தச் செய்தி நடைமுறையிலும் இருக்குன்னு இப்பதான் தெரிஞ்சிக்கிட்டேன். நன்றிப்பா" என்று ஆசிரியர் கூறிவிட்டு ஒரு உணவுப் பொட்டலம் தந்தார்.

"சாமி, இந்தக் குருவிகள்ல இன்னொரு வகை இருக்கு. அது மேலச்சரிவுல இருக்கு. கடுமையா வெயிலடிச்சா அந்தக் குருவி களி மண்ணைச் சிறுசிறு உருண்டைகளாக்கிக் கொண்டு போயி, கூட்டுல பரப்பி வைக்கும். அப்புறம் தண்ணியில போயி முங்கிட்டு வந்து சிறகுகள உதறி, களிமண் உருண்டைகள் மேல தெளிக்கும். கூடு சிலுசிலுன்னு குளிர்ச்சியா இருக்கும்."

"அப்ப குருவி, கூடுகளில் ஏ.சி. வச்சிக்கிடுதுன்னு சொல்றே, அப்படித்தானே?"

"ஏர் கண்டிசன் மனுசன் கண்டுபிடிக்கும் முன்னாடியே மற்ற உயிரினங்கள் அதை அனுபவிச்சி இருக்குன்னு தெரியுது!" - அமுதன்.

'நீலன் சொன்னதால இன்னைக்கிப் பல செய்திகள் தெரிஞ்சிகிட்டோம். நீலனுக்கு நன்றி.'

'நீலா, நானும் உன்னைத் தப்பா நினைச்சிட்டேன், மன்னிச்சிடுப்பா'' என்ற மணி நீலனுடன் கை குலுக்கிக் கொண்டான்.

"நேரமாச்சி புறப்படலாம்"

அவர்கள் கிளம்பினார்கள்.

பானை நிறைய பதநீர்!



எங்கள் விளையில் பன்னிரெண்டு,
ஏற்றமுள்ள பனை மரங்கள்;
நாங்கள் தண்ணீர் இறைப்பதில்லை!
நாளும் வளரும் அதுவாக.

பதநீர் கொடுக்கும் பனைஎட்டு,
பானை நிறையும் நுரைவிட்டு,
அதனைத் தலையில் சுமந்திட்டு,
அலைந்து வருவேன் வித்திட்டு!


பதனீர் விரும்பிக் குடிப்போர்கள்,
நிதமும் கொணர உரைப்பார்கள்,
அதனால் மனதும் நிறைவாக,
ஆயுள் கூடும் அழகாக!

ஓலைக் குடிசை என்றாலும்,
ஒழுகுவதில்லை ஒருநாளும்,
காலை நீட்டிச் சுகமாக
கண்ணயர் வேனே கட்டிலிலே!

ஓலை விசிறி ஒன்றெடுத்து,
ஓடி வருவாள் என் தங்கை,
தோலை வருடும் பூங்காற்று,
தோகை மயிலாய் நடனமிடும்!

ஞா.மாடசாமி






புதிர் பக்கம்

I. ஐந்து இரும்பு வளையங்களை ஒரே சங்கிலியாகச் சேர்க்க வேண்டும். ஒரு வளையத்தை வெட்டுவதற்குக் கூலி ஐந்து பைசா. மறுபடி அதை ஒட்டுவதற்குக் கூலி பத்து பைசா. ஐந்து வளையங்களையும் சங்கிலியில் சேர்க்க என்ன செலவாகும்?

- ஏ.எல். பாத்திமா,
காரைக்கால்.

II. கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு முக்கோணங்களில் உள்ள வட்டங்களில் ஒன்று முதல் ஏழு வரையிலான எண்களை எழுத வேண்டும். ஆனால் ஒரு நிபந்தனை. தொடர்ந்து வரும் இரு எண்கள் (1,2,3) ஒரே கோட்டினால் இணைக்கப்பட்டிருக்கக் கூடாது. எங்கே எழுதுங்கள்! ஒரு சலுகையும் உண்டு. கொடுக்கப்பட்டுள்ள விடைகளின்படி மட்டுமல்லாது வேறு சில முறைகளிலும் எண்களை எழுதலாம்.



- பா. மேரிஜெயசீலி,
ஏழாம் வகுப்பு,
புனித மரியன்னை
மெட்ரிக் பள்ளி,
மேட்டூர் அணை, சேலம்.

III. என் தந்தை ஒரு கூடை நிறைய ஆப்பிள் பழங்களை வாங்கிக் கொண்டு வந்தார். அவருக்கு வினோ, மனோ, மினு என்று மூன்று குழந்தைகள்.

வினோ ஒரு ஆப்பிளைத் தின்றுவிட்டு மற்றவற்றை மூன்றாகப் பங்கிட்டு, ஒரு பங்கை எடுத்துக் கொண்டான்.

பின்னர் மனோ ஒரு ஆப்பிளைத் தின்றுவிட்டு, மற்றவற்றை மூன்றாகப் பங்கிட்டு, ஒரு பங்கை எடுத்துக் கொண்டான்.

இறுதியாக மினுவும் ஒரு ஆப்பிளைத் தின்றுவிட்டு, மற்றவற்றை மூன்றாகப் பங்கிட்டு, ஒரு பங்கை அவள் எடுத்துக் கொண்டாள்.

தற்செயலாக என் தந்தை கூடைக்குள் எட்டிப் பார்த்தபோது, கூடைக்குள் ஆறு ஆப்பிள்கள் மட்டுமே இருந்தன. அப்படியெனில் என் தந்தை எத்தனை ஆப்பிள்களை வாங்கிக் கொண்டு வந்திருப்பார்?

- எம். வினோத், சங்கரன்கோவில்.

IV. எங்கள் வீட்டில் ஒரு தண்ணீர்த் தொட்டி இருக்கிறது. அதில் பொருத்தியுள்ள குழாய் விசித்திரமான குழாய். முதல் நிமிடம் கொஞ்சம் தண்ணீர் வரும். இரண்டாம் நிமிடம் அதைப் போல் இரண்டு மடங்கு வரும். மூன்றாம் நிமிடம் நான்கு மடங்கு. நான்காம் நிமிடம் எட்டு மடங்கு. இப்படி இரட்டித்துக் கொண்டே போகும். தொட்டி நிரம்ப ஒரு மணி நேரம் ஆகும். பாதித் தொட்டி எப்போது நிரம்பும்?

- ஆறுபாதி புகழேந்தி

V. சோமுவுக்கு அன்று பிறந்த நாள். நண்பர்களுக்குக் கொடுப்பதற்காகக் கடைக்கு மிட்டாய் வாங்கச் சென்றான். கடைக்காரரிடம் 50 மிட்டாய்களை வாங்கினான். அவற்றைப் பையில் போட்டு வீட்டுக்கு எடுத்து வருகையில் கல் தடுக்கி, கீழே விழுந்தான். பையிலிருந்த மிட்டாய்கள் அனைத்தும் சிதறி விழுந்தன. சோமு உடனே விழுந்த மிட்டாய்களில் சிலவற்றை அள்ளி பையில் போட்டான். பின்னர் மறுபடியும் சில மிட்டாய்களை அள்ளினான். தரையில் இன்னும் நிறைய மிட்டாய்கள் கிடந்ததால், இப்போது தன் இரு கைகளாலும் அள்ளி பையில் போட்டான். இதில் ஆச்சரியம் என்னவென்றால், முதல்முறை எடுத்ததை விட இரண்டாம் முறை எடுத்தது இரு மடங்காகும். அவ்வாறே, மூன்றாம் முறை அவன் எடுத்த மிட்டாய்கள், இரண்டாவது முறை எடுத்ததை விட மூன்று

மடங்காகும். சோமு எடுத்தது போக தரையில் சிதறிக் கிடந்த மீதி மிட்டாய்களின் எண்ணிக்கை, முதல் முறை அவன் எடுத்த மிட்டாய்களின் எண்ணிக்கைக்குச் சமமாகும். அப்படியானால் சோமு ஒவ்வொரு தடவையும் எத்தனை மிட்டாய்களை எடுத்தான் என்று கண்டுபிடியுங்கள்.

- என். அரவிந்த் மெய்யப்பன்,
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ சங்கரா
வித்தியாசிரமம்
மேல்நிலைப் பள்ளி,
சென்னை

VI கீழே கேட்கப் பட்டிருக்கும் ஆறு கேள்விகளுக்கான விடைகளில் சிவப்பு சம்பந்தப்பட்டிருக்கும்.

1. உருளைக்கிழங்கு சிப்ஸைக் கண்டுபிடித்தவர்கள் ________

2. மூன்று முறை நோபல் பரிசு பெற்ற சங்கம் ________

3. தீக்குச்சி செய்ய ________ பயன்படுகிறது.

4. ஃபிளமிங்கோ பறவை ________ என அழைக்கப்படுகிறது.



5. 80 ஆண்டுகள் வரை உயிர் வாழும் பறவை ________


6. இரத்தத்தின் நிறத்திற்குக் காரணமான அணுக்கள் ________

— நெ. இராமன்,
சென்னை.

புதிர் விடைகள்:

I. *30* பைசா போதும். இரண்டு வளையங்களை வெட்டி ஒட்ட வைத்தாலே போதும். ஐந்தையும் இணைத்து விடலாம்.

II.



III. *25* ஆப்பிள்கள்.

வினோவின் பங்கு : *25-1 = 8+8+8*

மனோவின் பங்கு : *16 -1 = 5+5+5*

மினுவின் பங்கு : *10- 1 = 3+3+3*

மீதி இருந்தவை = *6*

IV. *59* ஆம் நிமிடம் பாதித் தொட்டி நிரம்பும்.

V. முதல் முறை - *5*
இரண்டாம் முறை - *10*
மூன்றாம் முறை - *30*
மீதி இருந்தவை - *5*
50

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 பா	கி	ஸ்	தா	ன்		ன்	னா	2 கா
க		ர்		ட		ல		க
ற்		3 ந		ரு		4 வே	த	ம்
கா				5 க				
ய்	வா	வ்	6 செ		7 க	ட	க	ம்
				8 சா				ர
தை	ந்	9 ச		ம்		தி		தி
த்		ண		பா		ர		ந்
10 வி	ர	ல்		ர்	வு	11 சா	ஞ்	12 த

VI 1. சிவப்பிந்தியர்கள் 2. செஞ்சிலுவைச் சங்கம், 3. சிவப்பு பாஸ்பரஸ், 4. சிவப்பு நாரை, 5. சிவப்பு மார்புக் கிளி, 6. சிவப்பணுக்கள்

ஆர்.பொன்னம்மாள்



அன்னதானம்

சோழ நாட்டில் ஆக்கூரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர் சிறப்புலியார். பசியென்று வந்த சிவனடியார்களுக்குத் தினமும் அன்ன தானம் செய்து வந்தார். தினமும் அவ்வூரில் கோயில் கொண்டுள்ள தான் தோன்றீசரையும், வாள் நெடுங்கண்ணியம்மையையும் தரிசனம் செய்யாமல் உணவருந்த மாட்டார்.

சிறப்புலியாருக்கு ஒரே நாளில் ஆயிரம் பேருக்கு அன்னமிட வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. தன் பிறந்த நாளான கார்த்திகை பூராடத்தன்று அதைச் செய்ய விரும்பினார். தினமும் உணவருந்தும் அடியார்களிடமும், ஊராரிடமும் அன்று சாப்பிட வரும்படி கோரிக்கை விடுத்தார். அதோடு அருகிலிருந்த சிவஸ்தலங்களுக்குச் சென்று ''கார்த்திகை மாத பூராட நட்சத்திரத்தில் ஆக்கூரில் சிறப்பான அன்னதானம் நடக்கிறது. தான்தோன்றீசரைத் தரிசனம் செய்து சாப் பிட்டுச் செல்லுங்கள்'' என்று பரதேசிகளிடம் செய்தியைப் பரப்பினார்.

விஷயம் காட்டுத் தீயாய் பரவியது. ''ஆயிரம் பேருக்கு மேலாகி விட்டால் சாப்பாடு இல்லையென்று திரும்ப நேரிடுமே'' என்று சிலர் சிறப்புலியாரிடமே கேட்டனர்.

''அப்படியெல்லாம் ஆகாது. ஆயிரம் பேருக்குக் குறையக் கூடாது என்பதுதான் முக்கியம்'' என்று சமாதானம் சொன்னார் சிறப்புலியார்.

''ஏஞ் சாமி! சாம்பார் சாதம், புளியோதரை, தயிர்சாதம் இப்படி போடுவீங்களா? இல்லே, பருப்பு, பச்சடி, பாயசம், நெய், தயிர், அவியல் இப்படி போடுவீங்களா?'' என்று விசாரித்தான் ஒருவன்.

''பச்சடி, கூட்டு, பொரியல் என்று அறுசுவை விருந்து தான் பரி மாறுவார்கள்'' என்றார் சிறப்புலியார்.

பத்து நாட்கள் முன்பே பூர நட்சத்திரத்திலிருந்தே காய்கறிகள், தலை வாழை இலை ஆயிரம், சூடான உணவால் வியர்த்து தொண் டர்கள் சாப்பிட முடியாமல் அவதிப்படக் கூடாதென்று விசிறி விட ஆங்காங்கே பக்திப்பணி செய்யத் துடிக்கும் தொண்டர்கள், உபசரித்து இன்முகத்துடன் பரிமாற ஆட்கள் என்று எல்லாம் தயார் செய்தார்.


புறக்கடையில் பெரிய பந்தல் போட்டு ஆயிரம் பேரும் ஏக காலத்தில் சாப்பிட இலை போட்டு, வெட்டி வேரும், ஏலக்காயும்,

சிறிதளவு சுக்குப் பொடியும் போட்ட பதமான வெந்நீர் குவளைகளில் வைத்தாயிற்று. தொண்டர்களிடம் சிறப்புலியார், ''நான் தலைவாசலில் நின்று அடியார்களைத் தனித்தனியே விசாரித்து, அதே சமயம் நபர்களை எண்ணி உள்ளே அனுப்புகிறேன். பத்து, இருபது பேர் குறைந்தால் தாமதியாது உங்களுக்குள் பேசி வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுங்கள்! நான் பரிமாறுகிறேன்'' என்று கை கூப்பினார்.

''தாங்கள் கை கூப்புவதா?'' என அவர்கள் பதறினர். வாசலில் நின்று கூட்டம் கூட்டமாய் வந்தவர்களை வேகமாய் கணக்கிட்டு முகமன் கூறினார் நாயனார்.

999 ஆயிற்று. ஒருவர் வரவில்லை. உள்ளே பந்தி உபசாரம் அமர்க்களப் பட்டது.

''ஐயோ! சாமி! வயிற்றிலே இடமில்லை! இப்படி சொல்லியே பாதி அடுக்கு காலி பண்ணியிருக்கிறேன். தயிர் சாதம் உள்ளே போக நூலிழை வழியாவது வைக்க வேண்டாமா?'' என்று கெஞ்சினார் ஒரு சன்யாசி.



திருப்தியோடு பந்தி பந்தியாய் நோட்டம் விட்ட சிறப்புலியார் சிவநேசனிடம், ''ஓர் ஆள் குறைகிறது. நீ உட்கார்ந்து விடு'' என்றார் இரகசியமாக.

''எங்கே குறைகிறது? எல்லாம் நிரம்பி இருக்கிறதே! சிவஞானம், இலை எடுக்காதே! ஐயா பரிசோதித்துக் கொள்ளட்டும்'' என்று தன் தோழனிடம் உரக்கக் கூறினான் சிவநேசன்.

சிறப்புலி நாயனார் சாப்பிட்ட எச்சில் இலைகளை எண்ணினார். 'ஒன்று கூடக் குறையவில்லை! அப்

படியானால் நான் எண்ணியது தவறா? இல்லையே... ஒவ்வொருவராய் விசாரித்து எண்ணினோமே! தன் மனம் வருந்தக் கூடாதென்று, மகாவிஷ்ணு பூஜை செய்தபோது ஒரு மலரைக் குறைத்தது போல் குறைத்து தான் தோன்றீஸ்வரரே ஓர் அடியாராக வந்து உணவருந்திச் சென்றிருக்கிறார்! எந்த இலையில் சாப்பிட்டிருப்பார்? அவருக்குப் பரிமாறிய பாக்கியசாலி யாரோ? அது நானாக இல்லாமல் போய்விட்டேனே! அவர் ஒருவர் சாப்பிட்டது கோடானு கோடி பேருக்கும் மேலானதாயிற்றே' இப்படி எண்ணியதும் அவர் மேனி சிலிர்த்தது. நண்பர்களிடமும் தொண்டர்களிடமும் சொல்லிச் சொல்லிப் பூரித்தார். 'என் இறைவன் உண்ட மிச்சம்' என்று உகந்து உண்டார். 'சீர்கொண்ட புகழ் வள்ளல்' என்று சுந்தரமூர்த்தி நாயனாரால் சிறப்பிக்கப்பட்ட சிறப்புலியாரின் சிலையை திருஆக்கூர் சென்றால் காணலாம்.



பாடல்களை எப்படி இயற்றுவது?



• புத்தர்



• காந்தி

எப்படி இயற்றுவது?

சங்கீத மேதை மொஸார்ட்டிடம் ஒரு இளைஞன் வந்தான்.

"சிறந்த பாடல்களை எப்படி இயற்றுவது?'' என்று கேட்டான்.

''நீ சிறியவன். முதலில் எளிய பாடல்களை இயற்ற முயற்சி செய்!''

''நீங்கள் மட்டும் பத்து வயதிலேயே சிறந்த பாடல்களை இயற்றவில்லையா?''

''ஆமாம். ஆனால் எப்படி இயற்றுவது என்று நான் யாரையும் கேட்டுக் கொண்டிருக்கவில்லை!'' என்றார்!

தழை!

மரத்தடியில் அமர்ந்திருந்த கௌதம புத்தர் தனது அருகில் இருந்த பிரதம மாணவர் ஆனந்தனிடம் ''மரத்தில் ஏறி தழை பறித்து வா'' என்றார்.

ஆனந்தன் மரமேறி கைகொண்ட மட்டும் தழை பறித்துக் கொண்டு வந்து கௌதம புத்தர் முன்னே நின்றான்.

''ஆனந்தா, கையில் என்ன இருக்கிறது?''

''தழை சுவாமி.''

''மரத்தில் என்ன இருக்கிறது?''

''ஏராளமான தழை சுவாமி.''

''ஆனந்தா, உனக்கு நான் போதித்தது உன் கையில் உள்ள தழை அளவு; போதிக்காதது மரத்தில் உள்ள தழை அளவு. எனவே நீயேதான் அனுபவத்தால் உலகத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்றார்.

- எம். ஜரினா பானு, லெட்சுமாங்குடி.



• பாரதியார்

அன்பு...

நம் தேசத் தந்தை மகாத்மா காந்தி சென்னைக்கு வரும் போதெல்லாம் ஜி.ஏ. நடேசன் என்ற தேச பக்தரது இல்லத்தில் தான் தங்குவார். ஒருமுறை அவ்வாறு தங்கியிருக்கும்போது அவரது பெண் குழந்தை காந்திக்கு அன்புப் பரிசாக ஒரு பென்சிலைக் கொடுத்தாள். அதை காந்திஜி மிகவும் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருந்தார்.

ஒருநாள் சபர்மதி ஆசிரமத்தில் காந்தி எதையோ மும்முரமாகத் தேடிக் கொண்டிருந்தார். ரொம்ப நேரம் தேடி அந்தப் பொருளைக் கண்டுபிடித்தார். எல்லாரும் ஏதோ முக்கியமான பொருளைத்தான் காந்தி தேடிக் கொண்டிருந்தார் என்று நினைத்து அவர் அருகே சென்று பார்த்தால், அது அந்தக் குட்டிப் பெண் கொடுத்த பென்சில். ''போயும் போயும் இதையா இவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடினீர்கள்?'' என்று ஆசிரமத்திலிருந்த அனைவரும் கேட்டார்கள். உடனே காந்தி, ''பொருளின்

வழிகாட்டும் நட்சத்திரங்கள்...

அளவைப் பார்க்காதீர்கள். அதைக் கொடுத்தவரது உள்ளத்திலுள்ள அன்பை மட்டும் பாருங்கள்'' என்றார்.




• பெரியார்

பயணம்

புக்கர் வாஷிங்டன் என்ற நீக்ரோத் தலைவர் ஒருமுறை தென் கரோலினா மாகாணத்தில் பிரசங்கம் செய்ய வேண்டி யிருந்தது. ஒரு குதிரை வண்டிக்காரரிடம் குறிப்பிட்ட இடத்திற்குத் தன்னை அழைத்துச் செல்லுமாறு கூறினார்.

''நான் நீக்ரோக்களுக்கு வண்டி ஓட்டுவதில்லை'' என்று குதிரை வண்டிக்காரர் மறுக்க, ''அப்படியென்றால் சரி... நான் உன்னை வைத்து வண்டி ஓட்டுகிறேன்'' என்று கூறி, வண்டிக்காரரை உள்ளே உட்கார வைத்து, அவர் வண்டியைச் செலுத்தினார். குறிப்பிட்ட இடத்திற்குச் செல்ல வேண்டுமென்பதுதான் அவர் லட்சியம். எப்படி என்பதல்ல.

- எம்.வினோத், சங்கரன்கோயில்.



• ராஜாஜி

கூட்டம்

ராஜாஜியும் பெரியாரும் ஒரே பொதுக்கூட்டத்தில் பேச ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டத்திற்கு நிறையப் பேர் கூடியிருந்தனர். ''உங்களைப் பார்க்கவே இவ்வளவு கூட்டம்'' என்றார் பெரியார்.

''இல்லை, நம் இரண்டு பேரையும் சேர்ந்தாற் போல் பார்க்கத்தான் இவ்வளவு மக்கள் கூடியுள்ளார்கள்'' என்று பதில் சொன்னார் ராஜாஜி.

- ராஜலட்சுமி, கரூர்.



• ஆபிரகாம் லிங்கன்

தாய் மண்

மகாகவி பாரதியார் ஒருமுறை சொற்பொழிவாற்றி முடித்ததும் அவரை வழியனுப்ப சில தொண்டர்கள் ரயில் நிலையத்திற்கு வந்தார்கள். ரயில் வந்தது. அவசரமாக ரயிலேறச் சென்ற பாரதியார், தவறி மண்ணில் விழுந்தார். ''கவிஞரே! பார்த்து வரக் கூடாதா?'' என்று சொன்னார் தொண்டர் ஒருவர். ''நான் மண்ணில் விழுந்ததற்காகப் பதறாதீர்கள். என் தாய் நாட்டு மண்ணில் தானே விழுந்தேன்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார் பாரதியார்.

- ஜி. ப்ரணவ், கரூர்.

இரவல் புத்தகம்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தனது 15 வயதில் தான் கல்வி கற்கத் தொடங்கினார். அப்போது அவ்வூரில் காகிதம் கிடையாது. எனவே ஒரு மரப் பெட்டியின் மூடியில் கரித்துண்டினால் எழுதிப் படித்து வந்தார். பணமில்லாத காரணத்தால் பல நூல்களை இரவலாகப் படித்து வந்த லிங்கன், ஒருமுறை இரவலாகக் கொண்டு வந்த நூல் மழையில் நனைந்து கிழிந்துவிட்டது. அதனால் அந்த நூலுக்குரியவரின் நிலத்தில் மூன்று நாட்கள் வேலை செய்து ஈடுகட்டினார்.

- நெ. இராமன், சென்னை.



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

உங்களுக்குப் பிடித்தமான பரிசுப்போட்டி, ஜோக்ஸ், கதைகள், அனுபவங்கள், துணுக்குகள், ஓவியப் போட்டி என பல விஷயங்கள் கோகுலத்தில் வெளிவருகின்றன. கோகுலத்தைப் படித்து மகிழ்வதுடன் உங்கள் படைப்புகளையும் அனுப்பி வைக்கலாம். உங்கள் நண்பர்களையும் கோகுலம் உறுப்பினராக்கலாம்!

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



அன்புள்ள ஜக்கு...



● ஆர். சூரியநாராயணன், தேவகோட்டை

? ஊசி போடுவதற்கு முன் டாக்டர் ஏதோ ஒரு திரவத்தில் பஞ்சை நனைத்து தேய்க்கிறாரே ஏன்?

! அந்தத் திரவத்தின் பெயர் ஆல்கஹால். தோல் பகுதியிலுள்ள நுண்ணுயிரிகளை அழிக்க ஆல்கஹால் பயன்படுகிறது. இதனால் ஊசி போடும்போது இந்த நுண்ணுயிரிகள் நம் உடலில் புகுந்து தீங்கு ஏற்படுத்தாமல் தடுக்க முடிகிறது.

● கே. சௌம்யா, பகவதிபுரம்

? பல்லியின் வால் வெட்டுப்பட்டாலும் மீண்டும் வளர்வது எப்படி?

எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் தகவமைப்பைப் பல்லி பெற்றிருக்கிறது. வால் திரும்பப் பெறுகின்ற ஆற்றலுக்கு 'இழப்பு மீட்டல் சக்தி' என்று பெயர். பல்லியின் வால் பகுதியிலுள்ள வால் முள்ளெலும்பு கடினப்படாத பகுதி. இது எளிதில் துண்டாகி விழுந்து விடும். இது துடிப்பதையே எதிரி உயிரி பார்த்துக் கொண்டிருக்க, பல்லி தப்பித்து விடும். மறுபடியும் பல்லியின் வெட்டப்பட்ட வால் வளர்ச்சி பெறும். இந்த வாலின் அமைப்பு முந்தைய வாலைப் போல் இருக்காது.

● வே. சுபஸ்ரீ, நல்லூர்

? நாங்கள் வசிப்பது கிராமம். சார்ஸ் நோய் பற்றி எங்களுக்கு அவ்வளவாகத் தெரியாது. அதைப் பற்றி சொல்லேன் ஜக்கு.

சுபஸ்ரீ, இந்த இதழில் 'ஹலோ சுகமா?' பகுதியில் டாக்டர் கணேசன் சார்ஸ் பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறார். படித்துக் கொள்ளுங்கள்.

● கே.ரோஸ், திருத்துறைப்பூண்டி

? மாவீரன் நெப்போலியன் பற்றிய தகவல்களைச் சொல்லேன் ஜக்கு.

ஏழைக் குடும்பத்தில் பிறந்து, ஃபிரான்ஸ் நாட்டின் பேரரசராக உயர்ந்தவர் நெப்போலியன். இவருடைய முழுப் பெயர் நெப்போலியன் போனபார்ட். 1785ஆம் ஆண்டு ஃபிரெஞ்சுப் படையில் சேர்ந்து விரைவில் அதிகாரியாக உயர்ந்தார். 1789ல் ஃபிரெஞ்சு மக்கள் தங்கள் அரசருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். இது 'ஃபிரெஞ்சுப் புரட்சி' எனப்படுகிறது. நெப்போலியன் புரட்சிப் படையில் சேர்ந்து போரிட்டார். புரட்சியின் இறுதியில் ஃபிரான்ஸ் குடியரசானது. சில ஆண்டு



களில் இக்குடியரசுக்கு எதிராக மீண்டும் சிலர் கிளர்ச்சி செய்தனர். நெப்போலியன் இந்தக் கிளர்ச்சியை ஒடுக்கி அமைதியை நிலை நாட்டினார். தன்னுடைய 26ஆம் வயதில் ஃபிரெஞ்சுப் படையின் தலைவ ரானார்.

நெப்போலியன் அண்டை நாடுகளின் மீது படையெடுத்து 10 ஆண்டுகளுக்குள் ரஷ்யாவைத் தவிர மற்ற ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றினார். 1804ஆம் ஆண்டு ஃபிரான்ஸின் பேரரசராக முடி சூட்டிக் கொண்டார். 1813ல் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து நெப்போலியனைத் தோற்கடித்தன. 1814ல் பதவியைத் துறக்க நேர்ந்தது. 1815ல் பாரிஸைக் கைப்பற்றச் சென்ற போது நடந்த போரில் தோல்வி அடைந் தார் நெப்போலியன். ஆங்கிலேயரின் படை இவரைக் கைது செய்து செயின்ட் ஹெலினா தீவில் சிறை வைத்தது. அங்கு இவர் தம் இறுதிக் காலத்தைக் கழித்தார்.

● **ப. ராமகிருஷ்ணன், காயக்காடு**

? டால்ஃபின் அன்பான பிராணியா?

டால்ஃபின்கள் மிகவும் அன்பாகப் பழகக் கூடியவை. ஒற்றுமையாக இருக்கும். தங்கள் கூட்டத்தைக் கவனமாகக் காவல் காக்கும். ஒரு டால்ஃபினுக்குக் காயம் ஏற்பட்டால் அதைக் கடல் மட்டத்திற்கு மேல் தூக்கி வந்து சுவாசிக்க வைத்து முதலுதவி அளிக்கக் கூடியவை. கடலில் தவறி விழுந்த மனிதர்களைக் கூட இவை இழுத்து வந்து கரையில் சேர்த்திருக் கின்றன. டால்ஃபின்கள் அன்பானவை மட்டுமல்ல, மிகவும் புத்திசாலிகள். எதையும் வேகமாகக் கற்றுக் கொள்ளக் கூடியவை. கற்றுக் கொண்டதை நீண்ட காலம் நினைவில் வைத்துக் கொள்ளும் ஆற்றலும் இவற்றிற்கு உண்டு.

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு



இந்த மாதப் போட்டி வெகு சுலபமாக இருந்திருக்கிறது என்பதைக் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையிலிருந்தே அறிய முடிகிறது. சரியான விடை அளித் தவர்களில் இருந்து குலுக்கல் முறையில் 5 பேர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.


சரியான விடை:

1. கிரிக்கெட் மட்டை - வில்லோ மரம்
2. இராக் - பாக்தாத்
3. அமெரிக்காவின் தந்தை - ஜார்ஜ் வாஷிங்டன்
4. மனிதன் - ஹோமோசேப்பியன்
5. வீனஸ் - நீளமான நாள்
6. புத்தரின் அம்மா - மாயா
7. மிளகாய்
8. ரொனால்டோ

பரிசு பெற்றவர்கள் :

1. பி. ரேவதி, ஐந்தாம் வகுப்பு, கார்பரேஷன் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சென்னை.
2. ஜி. பாக்யலட்சுமி, ஆறாம் வகுப்பு, அன்னை மேல்நிலைப்பள்ளி, திருச்சி.
3. எஸ். திலகவதி, ஆறாம் வகுப்பு, வெஸ்லி ஆங்கிலப் பள்ளி, பாண்டிச்சேரி.
4. ஞா. கௌதம் கார்த்திக், எம்.எஸ்.பி. சோலை நாடார் நினைவு பள்ளி, திண்டுக்கல்.
5. இ. நந்தினி, ஏழாம் வகுப்பு, ஏ.எம். ஹெச்.எஸ். பள்ளி, பொள்ளாச்சி.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.



நேரம் வரும் காத்திரு!

⑥ மீண்டும் பிரச்னை!

வில்சன் வீட்டு கம்ப்யூட்டரில் இருந்த நெட் கனெக்ஷனில் துழாவிக் கொண்டிருந்தார்கள் நண்பர்கள் நால்வரும். விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தும் ஊக்க மருந்து பற்றிய தகவல் தேடுவதில் குறியாய் இருந்தான் அருண்.

''சரிடா! இந்த ட்ரக்ஸ் பத்தியெல்லாம் தகவல் அவனுக்கு எதுக்காம்டா?'' என்றான் ராகவ்.

''இதென்னடா கேள்வி! தெரிஞ்சுக்கதான். இப்பதான் அது பத்தி நிறைய செய்தி வந்துட்டேயிருக்கே! ஏன் போன மாசம்கூட ஒரு நியூஸ் வரலை? நேஷனல் லெவல்ல ஏற்கெனவே மெடல் வாங்கின நிறைய பேரு ஊக்க மருந்து யூஸ் பண்ணியிருக்காங்கன்னு இப்ப கண்டுபிடிச்சு ஆக்ஷன் எடுக்கறாங்களே! அந்த நியூஸ் நீ கேக்கலையா?'' - அருண்

''சரி! என்ன நீ எதிர்பார்க்கற நியூஸ் கிடைச்சுதா? இல்லாட்டி வாடா ஆஃப் பண்ணிட்டுப் போகலாம்'' என்றான் வில்சன்.

''எங்க போகணும்ங்கிற? ஒண்ணு பண்ணுங்க! நீங்க எல்லாம் போய் விளையாடுங்க! எனக்கு ஒரு அரை மணி நேரம் டைம் வேணும். நான் முடிச்சிட்டு வந்துடறேன்'' என்றான் அருண்.

பொற்கேணி பள்ளியில் –


மாலை 4.30 மணி.

பி.இ.டி அறை முன் மாணவர்கள் தயாராகிக் கொண்டிருந்தார்கள். அதெலட்டிக்ஸில் பயிற்சி பெறுபவர்கள் ஷூக்களை மாட்டிக் கொண்

டிருக்க. மற்ற விளையாட்டில் ஆர்வம் கொண்டவர்கள் அந்தந்த விளையாட்டிற்கு ஏற்ப தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

பி.இ.டி மோகன் ட்ராக் சூட்டில் இருந்தார். பையிலிருந்த ஃபைலைப் பார்த்தபடி மாண வர்களை நெருங்கி வரச் சொல்லி அழைத்தார். தூரத்தில் இருந் தவர்களுக்கு வாயிலிருந்த விசிலை ஊதி, கை அசைத்தார். மாணவர்கள் அனைவரும் அவர்முன் கூடினர்.

''பாய்ஸ்! இந்த வருஷம் டிவிஷனல் லெவல் டோர்னமெண்ட் டேட்ஸ் வந் துடுச்சு! இன்னும் ஒரு மாசம்தான் இருக்கு! அதனால எல்லாரும் சீரியஸா ப்ராக்டீஸ் பண்ணணும். இந்த வருஷம் நாம அத்லெட் டிக்ஸ் சாம்பியன்ஷிப் வாங்க முடியும்னு பிரின்ஸிகிட்ட சொல்லியிருக் கேன். அதெல்லாம் உங்க



மேல இருக்கிற நம்பிக்கையாலத்தான். அதைக் காப்பாத்துவீங்கன்னு நெனைக்கிறேன். அப்படித்தானே!''

''எஸ் ஸார்!'' என்றார்கள் கோரஸாக.

''ஓகே! இப்ப எந்தெந்த கேம்... எந்தெந்த சென்டர்ல... என்னைக்கு நடக்குதுன்னு சொல்றேன். கவனமா கேளுங்க!'' என்றார்.



மோகனின் அறிவிப்புக்காக மாணவர்கள் காத்திருந்தனர்.

டிரிங்... டிரிங்... டிரிங்...

சென்னையில் அருண் வீட்டு ஃபோன் ஒலிக்க, யாமினி ஃபோனை எடுத்தாள்.

''ஹலோ...'' என்றாள் யாமினி.

''அக்கா! நான்தான் ராகவ் பேசறேன்.''

''சொல்லுடா, வாலு! எப்படியிருக்க? அப்பா, அம்மால்லாம் எப்படியிருக்காங்க?''

''இன்னைக்கு லீவுதானே! என்ன வீட்டுல இருப்பீங்களா? இல்லை...''

''என்ன வேணும்? அதைச் சொல்லு! உன் ஃபிரண்ட்ஸ் இல்லாம வீட்டுல போர் அடிக்குதா? இங்க வீட்டுக்கு வர்றியா? வாடா!''

''வர்றேன். ஆனா சும்மா இல்லை! போனா வாரம் இன்டர்நெட்லயிருந்து டவுன்லோட் பண்ணி கொஞ்சம் பிரிண்ட்அவுட் எடுத்தோம். அதுல கொஞ்சம் புரியலை.''

''எதைப் பத்தி? கொண்டாயேன், படிச்சிட்டு சொல்றேன்.''

ராகவ் கிளம்பினான்.

பொற்கேணி பள்ளிக்கூட ஸ்டாஃப் ரூம்.

பி.இ.டி மோகன் கையில் ஒரு ஃபையிலுடன் நுழைந்தார்.

''என்ன மோகன்! இந்த வருஷம் சேம்பியன்ஷிப் வாங்கிட்டு வரோம்ன்னு சொல்லியிருக்கீங்களாமே!'' என்று அவரை வரவேற்றார் ஆசிரியர் மகேஷ்.

''ஆமாம் சார். அந்த நம்பிக்கை இருக்கு! நேத்து பிராக்டீஸ்ல கூட மனோஜ், ராஜேந்திரன், ராஜ்திலக், பணிக்கர், அந்தியாலுன்னு

• தமிழ்க் கருவூலம் - புறநானூறு. -கே. நந்தினி, நெல்லை.

5 பேர் பெர்ஃபாமன்ஸும் ரெக் கார்ட்தான். அவங்களுக்கு உடம்புக்கு எதுவும் பிரச்னை இல்லாம, இதே அளவு பெர்ஃபார்ம் பண்ணாகூட போதும். அதில்லாம இன்னும் ரெண்டு மூணு பேராவது செகண்ட்... தேர்ட் பிளேஸ் வருவாங்கன்னு நெனைக்கிறேன். அதனால



அவங்களுக்கு இன்னும் கொஞ்சம் பிராக்டீஸ் தேவைப்படுது. பிரின்ஸி கிட்ட பர்மிஷன் வாங்கிட்டேன். அவங்கவங்க கிளாஸ் டீச்சர்ஸ் கிட்டச் சொல்லிடச் சொன்னார். அதுக்குதான் வந்தேன்'' என்று பெருமிதத்துடன் சொன்னார் மோகன்.

''சரி... இத்தனை வருஷமா இல்லாம இந்த வருஷம் எல்லா மெடலையும், சேம்பியன்ஷிப்பையும் தட்டிட்டு வந்தீங்கன்னா ஏதாவது குறை சொல்லப் போறாங்க! அப்புறம் சேஃப் கேம்ஸ் இந்தியா நிறைய மெடல் வாங்கினபோது குறை கண்டுபிடிச்சாங்களே அது மாதிரி ஆயிடப் போகுது.''

''அட... நீங்க வேற! இந்த ஸ்கூல் லெவல் ஸ்போர்ட்ஸ்ல அந்த மாதிரியெல்லாம் டெஸ்ட் நடத்தறது இல்லைங்க! சார் அதெல்லாம் நேஷனல் லெவல், இன்டர்நேஷனல் லெவல் ஸ்போர்ட்ஸ்லதான்.''


''அது சரி! ஆனா அது மாதிரியெல்லாம் நடக்குதுன்னு நம்ம பசங்களுக்குத் தெரியுமா?''

''தெரியுமாவது? எனக்கே சொல்லித் தர்றானுங்க! போன வாரம் நெட்லயிருந்து நிறைய டவுன்லோட் பண்ணி பிரிண்ட் அவுட் எடுத்துட்டு வந்து என்கிட்ட கொடுத்து அது பத்தியெல்லாம் கேட்டாங்க! நிறைய தகவல் தெரிஞ்சு வெச்சிருக்கானுங்க! ஆனா எனக்கென்னவோ ஸ்போர்ட்ஸை, கேரியரா நினைக்கற பசங்க ஒருத்தன்கூட இருக்கறதா தெரியலையே!'' என்றார் மோகன்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே சதாசிவம் ஸ்டாஃப் ரூமிலிருந்து கிளம்பினார். அவரைப் பார்த்ததும், ''சார்! உங்களையும்தான் பார்க்க வந்தேன். ஹாஸ்டல் ட்யூட்டரா எப்படி சார் இருக்கு? ஆனா நீங்க வந்ததிலிருந்து பசங்க கொஞ்சம் பயப்படறாங்க போலிருக்கு! ஈவினிங் டைம் ஹாஸ்டலுக்கு வர்றதுக்கும் டைம் ஃபிக்ஸ் பண்ணிட்டீங்க போல! இதோ இந்த லிஸ்ட்ல இருக்கிற பசங்களுக்குக் கொஞ்சம் டைம் ரிலேக்ஸ் பண்ணுங்களா? பிராக்டீஸ் முடிச்சிட்டுக் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டுக் கிளம்புவானுங்க! இந்த வருஷம் எப்படியும் சேம்பியன் ஷிப் வாங்கறோம் சார்!'' என்றார்.

''ம்..கேட்டுட்டுதான் இருந்தேன். ஓகே!

கோடை விடுமுறைப் போட்டி – I முடிவு



இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்களின் கூப்பன்கள் மலையென குவிந்துவிட்டன. அனைவரும் 20 தவறுகளைக் கண்டறிந்து சரியான விடைகளை அளித்திருந்தனர். இவர்களில் பத்து பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பரிசு கிடைக்காவிட்டாலும் போட்டியில் பங்கு கொண்டதே சுவாரசியமான விஷயம் அல்லவா!

ரூ. 20/- பரிசு பெற்றவர்கள் :

1. ஆர். இந்துமதி, வேலூர்.
2. அ.ழ. இராமநாதன், புதுக்கோட்டை.
3. ஜெ. சூர்ய பிரகாஷ், மேட்டுப்பாளையம்.
4. ச. துர்கா பூரணி, மதுரை.
5. தி. நந்தினி, நீர்முளை, நாகை மாவட்டம்.
6. ஆர். மாதவன், பாபநாசம், தஞ்சை மாவட்டம்.
7. சாலை உலகநாதன், மெய்வழிச்சாலை, புதுக்கோட்டை.
8. எம். ஸ்வேதா, கோவை.
9. எஸ். பாலவிஜயலக்ஷ்மி, உறையூர், திருச்சி மாவட்டம்.
10. கி.ச. சுப்ரபா, சென்னை.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

இந்த லிஸ்ட்ல இருக்கறவங்க மட்டும் தானே!" - சதாசிவம்.

"ஆமாம் சார்!"

"ஓகே. நோ ப்ராப்ளம். நான் கிளம்பறேன்" என்றபடி லிஸ்ட்டை வாங்கிக் கொண்டு கிளம்பினார் சதாசிவம்.

மூன்றாவது நாள்.

அவசரமாக ஏற்பாடான கூட்டத்திற்கு கரஸ்பாண்டண்ட்டும் வருகிறார் என்பதால், ஆசிரியர்கள் அனைவரும் டென்ஷனாக இருந்தனர். எதற்காக இந்தக் கூட்டம் என்று கூட யாருக்கும் தெரியாததால் எல்லாரும் ஆவலாக மீட்டிங் முடிவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். நீண்ட நேரம் நடந்த மீட்டிங் முடிந்து கோபமாக வெளியே வந்த கரஸ்பாண்டண்ட், "இங்க பாருங்க பிரின்ஸ்பால் சார்! எனக்குப் பெயர் முக்கியம்தான். பள்ளிக்கூடம் நிறைய சாதனையெல்லாம் செய்யணும்ன்றது அவசியம்தான். ஆனா அது எந்த வழியில வேணா இருக்கலாம்ன்னு நான் நெனைக்கலே! பசங்களுக்கு ஒழுக்கம் தான் முக்கியம். அதனால இந்த விஷயத்துல வேற பேச்சே இல்லை. உடனே நடவடிக்கை எடுக்கணும்! அந்த பி.இ.டி... பேரு என்ன, மோகனா? அவரும்... அந்தப் பசங்க ரெண்டு பேரு பேரு என்ன? அருணும், மாதவனுமா? ஏதோ ஒண்ணு! ஆனா, அந்த மூணு பேருக்கும், இந்த ஸ்கூலுக்கும் எந்தச் சம்மந்தமும் இருக்கக் கூடாது. நாளைக்குக் காலைலயே அவங்க எல்லாரையும் டிஸ்மிஸ் பண்ணிடுங்க! இதுல மறுபடியும் யோசிக்க எதுவும் இல்லை. முதல்ல இதைச் செஞ்சு முடிங்க! அப்புறம் மத்த விஷயங்களைப் பேசிக்கலாம். ஓகேவா?" என்றபடி கிளம்பினார்.

"சார்... இப்ப நம்ம டீம்கூட 'ஸ்போர்ட்ஸ் மீட்'டுக்கு யாரை அனுப்பறது...?" என்று இழுத்தார் பிரின்ஸ்பால்.

"இதென்ன கேள்வி? வேற யாராவது போய் வாங்கய்யா! நீங்களா விளையாடப் போறீங்க! பசங்கதானே விளையாடப் போறாங்க! பசங்களுக்குத் தேவையான ஹெல்ப் ஆர்கனைஸ் பண்றதுக்கு பி.இ.டியால மட்டும்தான் முடியுமா? அப்படின்னா... விடுங்க! நம்ம டீம் போகாட்டியும் பரவாயில்லை. பார்த்துக்கலாம். அடுத்த வருஷம் பார்த்துக்கலாம். இப்ப, இதுக்கு மேல எதுவும் பேசாதீங்க!" என்றபடி வேகமாகக் கிளம்பிச் சென்றுவிட்டார். (தொடரும்)



முதல் பரிசு

என். கீர்த்திகா, பன்னிரண்டாம் வகுப்பு, வாலாஜாபேட்டை மேல் நிலைப் பள்ளி, வாலாஜாபேட்டை.

இரண்டாம் பரிசு

கு. தீப்தி திவ்யா, ஆறாம் வகுப்பு, தேனி மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, பழநி.



மானே... மானே...

வண்ணத் தூரிகை முடிவு

ஜூனின் இதழில் 'மான்கள்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்து இருந்தோம். வந்து குவிந்த ஏராளமான மான்களில் பரிசு பெற்ற மான்கள் உங்கள் முன்னே...



மூன்றாம் பரிசு

பி.கே. வர்த்தமான்,
ஏழாம் வகுப்பு,
மாமல்லன் மெட்ரிக் பள்ளி,
காஞ்சிபுரம்.

ஆறுதல் பரிசு

டி.ஜி. சிவப்ரியா,
ஏழாம் வகுப்பு,
மாமல்லன் மெட்ரிக் பள்ளி காஞ்சிபுரம்.




ஆறுதல் பரிசு

ச. கார்த்திகேயன்,
பத்தாம் வகுப்பு,
கே.டி. காந்தி உயர் நிலைப் பள்ளி.
இராயவரம், புதுக்கோட்டை மாவட்டம்.



செய்தித் துளிகள்



சாதனைக் குழந்தை!

கடலூர் மாவட்டம் சுந்தவாண்டி கிராமத்தைச் சேர்ந்தவள் அட்சயா. மூன்று வயதான அட்சயா 400 திருக்குறள்களை மனப்பாடமாக ஒப்பிக்கும் திறமை பெற்றிருக்கிறாள். அட்சயாவின் அப்பா விவசாயக் கூலி வேலை செய்கிறார். அட்சயாவின் படிப்புச் செலவுக்காக முதல்வர் 5 லட்சம் ரூபாயை வழங்கியிருக்கிறார்.

முதல் சூரிய கிரகணம்

புத்தாயிரம் ஆண்டின் முதல் சூரிய கிரகணம் மே 31ந் தேதி ஏற்பட்டது. சூரியனுக்கும் பூமிக்கும் இடையே நேர் கோட்டில் சந்திரன் வரும்போது சூரியன் மறைக்கப்படுகிறது. இது சூரிய கிரகணம் எனப்படுகிறது. பூமியிலிருந்து 4 லட்சம் கிலோ மீட்டர் தூரத்திலிருந்து சூரியனை மறைக்கும். இந்த முறை கூடுதலாக 50 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் பூமியை விட்டு விலகி சூரியனை முழுமையாக மறைத்துள்ளது. இந்தக் கிரகணம் டில்லி, ஜெய்ப்பூர், ஸ்ரீநகர், ஆக்ரா, குருஷேத்திராவில் நன்றாகத் தெரிந்தது.

ஆயுதங்கள் அழிப்பு

ரஷ்யாவிடம் உள்ள ரசாயன மற்றும் அணு ஆயுதங்களை அழிக்க 'ஜி-8' நாடுகள் 96 ஆயிரம் கோடி ரூபாய் நிதியுதவி வழங்க உள்ளன. ஒருங்கிணைந்த சோவியத் யூனியனாக இருந்தபோது உலகின் மாபெரும் வல்லரசு நாடாக ரஷ்யா இருந்தது. ரசாயன மற்றும் அணு ஆயுதங்களைத் தயாரித்தது. சோவியத் யூனியன் சிதறியதைத் தொடர்ந்து இந்த ஆயுதங்களை எல்லாம் வைத்துப் பாதுகாக்க முடியாத அளவுக்கு ரஷ்யாவின் பொருளாதாரம் சீரழிந்துவிட்டது. எனவே 40 ஆயிரம் டன் ரசாயன ஆயுதங்களையும், அணு ஆயுதங்களையும், புளுட்டோனியத்தையும், அணு ஆயுத நீர் மூழ்கிக் கப்பல்களையும் அழிக்க ரஷ்யா முடிவு செய்துள்ளது.


சந்திரனுக்கு இந்திய ராக்கெட்

சந்திரனுக்கு ராக்கெட் அனுப்பி, அங்கு ஆய்வு மேற்கொள்ளும் பணி மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது. விண்வெளி ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ள நமது விஞ்ஞானிகளைப் பொறுத்தவரை, சந்திரன் அடைந்துவிடக் கூடிய தூரத்தில் தான் இருக்கிறது. அங்கு ராக்கெட் அனுப்பி ஆய்வு மேற்கொள்ளக் கூடிய அளவுக்கு வசதிகளும், திறமையும் நம்மிடம் இருக்கிறது என்று விண்வெளி ஆய்வு மையத்தின் தலைவர் கஸ்தூரி ரங்கன் தெரிவித்துள்ளார். வரும் 2007ஆம் ஆண்டுக்குள் ஆளில்லாத ராக்கெட்டைச் சந்திரனுக்கு அனுப்புவது உறுதி. இந்தப் பணிக்குச் சுமார் 350 கோடி ரூபாய் நிதி உதவி தேவைப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.



சுழல் கோப்பை வேண்டுமா?

ஒவ்வோர் ஆண்டும் கோகுலம் இதழ்களில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ, அப்பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சுழல் கோப்பையை உங்கள் பள்ளி பெற வேண்டுமா? அப்படியென்றால் உடனே உங்கள் படைப்புகளை அனுப்பி வையுங்கள். உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள். இன்னும் ஐந்து மாதங்களே உள்ளன.









கோள் சொல்லி கோவிந்தன்!

கதையும் புதிரும்

கோவிந்தன் படிப்பில் சுமார். ஆனால் 'கோள்' சொல்வதில் அவனை மிஞ்ச ஆளே கிடையாது. பள்ளிக்கு வருவதே 'கோள்' சொல்லத்தானோ என்று நினைக்கும் அளவிற்கு அநியாயத்துக்குக் கோள் சொல்லிக் கொண்டே இருப்பான். அதனால் அவனை எல்லோரும் 'கோள் சொல்லி கோவிந்தன்' என்று அழைத்தனர்.

அன்று செந்திலின் பிறந்த நாள். அவன் நண்பர்கள் குமார், ராஜாவுக்காக இரண்டு கேக்குகளைக் கொண்டு வந்திருந்தான். ராஜா இன்னும் பள்ளிக்கு வரவில்லை. குமாரிடம் கேக் கொடுத்தான் செந்தில். அப்போது அங்கு வந்த கோ.சொ. கோவிந்தன் தனக்கென ஒரு கேக்கை எடுத்தான்.

"கோவிந்தா, நான் ரெண்டு கேக் தான் கொண்டு வந்தேன். நீ பாதி எடுத்துக்கிட்டு ராஜாவுக்குப் பாதியாவது வைடா" என்றான் செந்தில்.

"ராஜா ரொம்ப நல்லவன்டா. கோவிந்தன் கேக் எடுத்துக் கிட்டான்னு சொல். கோவிச்சுக்க மாட்டான்" என்றபடி அங்கிருந்து அகன்றான் கோ.சொ. கோவிந்தன்.

செந்திலுக்கும் குமாருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அதற்குள் மணியடிக்கவும் பிரேயருக்குச் சென்றனர்.

பிரேயர் முடிந்து வரும்போது ராஜாவுக்கு அருகில் சென்றான் கோ.சொ.கோவிந்தன். "என்ன ராஜா, இன்னிக்கு செந்திலோட பிறந்த நாளாமே! எனக்குத் தெரியாது. பள்ளிக்கு வந்தவுடன் என்னைக் கூப்பிட்டு கேக் கொடுத்தான். அப்போதுதான் தெரிந்தது. உனக்குக் கொடுக்கலையா?" - கோ.சொ. கோவிந்தன்.

"எனக்கு வச்சிருப்பான். நீ உன் வேலையைப் பார்" என்றான் ராஜா.

"அவன்கிட்ட இருந்த கடைசி கேக் தான் எனக்குக் கொடுத்தான். ராஜாவுக்கு வேணாமா, பாதியாவது கொடேன்னு சொன்னேன். ராஜாவாவது கூஜாவாவது போடான்னு சொல்லிட்டான். நீதான் அவனை உயிர் நண்பனா நினைச்சு பரிசு வாங்கிட்டு வந்திருக்கே" என்று கூறிவிட்டு வகுப்புக்குள் நுழைந்தான் கோ.சொ. கோவிந்தன்.

இடைவேளையின்போது செந்தில் ராஜாவிடம் வந்தான். ராஜா கோபமாக வார்த்தைகளைக் கொட்டினான். குமாரும் செந்திலும் நடந்த விஷயங்களைக் கூற சமாதானம் ஆனான் ராஜா.

இப்படி கோ.சொ. கோவிந்தனின் திருவிளையாடல்களால் வகுப்பில் தினமும் ரகளை ஏற்பட்டது. இதனால் அவனிடம் பேசவே பலரும் தயங்கினர். வகுப்பில் தனிமைப்படுத்தப்பட்டான் கோ.சொ. கோவிந்தன். அப்படியும் அவனுக்குப் புத்தி வரவில்லை.

ஒரு நாள் ஆசிரியர்கள் இருவர் பேசியதை இன்னொரு ஆசிரியரிடம் கோள் மூட்டி விட்டான் கோவிந்தன். விஷயம் பெரிதாகி தலைமை ஆசிரியர் வரை சென்றது. பிரச்னைக்குக் காரணமான கோ.சொ. கோவிந்தன் பெரிய தண்டனைக்கு உள்ளானான்.

இதை உணர்த்தும் குறளைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

அறஞ்சொல்லு ____ ____ ____
புன்மையாற் ____ படும்.

- தம்பிப் பயல்

குழந்தைகளைக் கொள்ளை கொண்டவர்!

தமிழ் குழந்தை இலக்கிய உலகில் வெற்றிக் கொடி நாட்டிய எழுத்தாளர். குழந்தைகளுக்காக கிட்டத்தட்ட எழுபது கதைகள், நாவல்கள் எழுதியிருக்கிறார் வாண்டு மாமா. அது மட்டுமா? குழந்தைகளின் அறிவியல் ஆர்வத்தை வளர்க்கும் விதமாக ஐம்பது அறிவியல், விலங்கியல் நூல்கள் எழுதியிருக்கிறார். சித்திரத் தொடர் கதையைத் தமிழ்நாட்டில் உருவாக்கியவர் இவரே! ஐம்பதுக்கும் மேற்பட்ட சரித்திரத் தொடர் கதைகள் வாண்டு மாமாவின் கற்பனையில் உதித்து வாசகர்களின் மனதைக் கொள்ளை கொண்டு விட்டன. அந்தச் சரித்திரக் கதைகளின் கதாநாயகர்களான பலே பாலுவும், வீர விஜயனும் இன்னமும் அச்சாக நெஞ்சில் பதிந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட அறுபது வருடங்களாக எழுதிக் கொண்டிருக்கும் இவருக்கு வயது இப்போது எழுபத்தெட்டு. முதுமை, உடல் உபாதைகள் பல இருந்தாலும், இன்றும் தினசரி இரண்டு மணி நேரம் எழுதுகிறார். 'தாத்தா... தாத்தா கதை சொல்லு' என்ற நூல் இப்போது வெளிவர இருக்கிறது. வாண்டு மாமாவின் மற்றொரு புனைப் பெயர் கௌசிகன். ஒரிஜினல் பெயர் கிருஷ்ணமூர்த்தி. கோகுலத்தின் முதல் பொறுப்பாசிரியர்.



பாலருக்குப் பாதை காட்டியவர்

"என்னோட பூர்வீகம் திருச்சி மாவட்டத்திலுள்ள திண்ணியம் கிராமம் என்றாலும், நான் பிறந்தது புதுக்கோட்டை மாவட்டம் அரிமழம் என்ற கிராமத்தில் தான். சிறிய வயதில் திண்ணியம் திருச்சி சின்னக் கடை பிள்ளையார் கோயிலின் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் தான் என் கல்வி துவங்கியது. பின்னர் ஆரியன் செகண்டரி



* வாண்டு மாமா

பள்ளியிலும், முகமதியன் பள்ளியிலும் தொடர்ந்து நேஷனல் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.ஸி. முடித்தேன்.

"எனக்குச் சிறு வயதிலேயே சித்திரங்கள் வரைவதில் ஈடுபாடு. ரவிவர்மாவின் படங்களைப் பார்த்து அதேபோல் வரைந்து மகிழ்வதில் மிகவும் ஆர்வம். இளமையில் சித்திரக்காரராக வர வேண்டும் என்ற எண்ணத்துடன் எழுத்தாளராக வர வேண்டும் என்ற ஆர்வமும் இணைந்து கொண்டது. நேஷனல் பள்ளியில் படிக்கும்போது நான் எழுதிய 'குல்ருக்' என்ற கதை கலைமகளில் வெளிவந்தது. அச்சில் வந்த இந்தக் கதை என் எழுத்தார்வத்துக்கு மேலும் உரம் போட்டது. சில நாட்கள் திருச்சியில் விளம்பர பேனர்கள், லேபிள்கள் எழுதும் ஓவியனாகவும் தொழில் பார்த்ததுண்டு. பத்திரிகையில் பணியாற்ற வேண்டும் என்ற என் ஆர்வத்தைப் பார்த்து, நண்பர் ஒருவர் சென்னைக்கு அழைத்துச் சென்று பிரபல கேலி சித்திர ஓவியர் விகடன் 'மாலி'யிடம் அறிமுகப் படுத்தினார். விகடனின் கதை, கட்டுரைகளுக்குத் தலைப்பு எழுதும் ஆர்ட்டிஸ்ட் வேலை கிடைத்தது. ஆனால் படம் போட வாய்ப்போ, எழுதுகிற வாய்ப்போ கிடைக்கவில்லை. ஒருமுறை நான் எழுதிய கதையை மாலி அவர்களிடம் கொடுத்து 'விகடனி'ல் பிரசுரம் செய்யக் கேட்டுக் கொண்டேன். "பெரியவர்களுக்குக் கதை எழுத நிறைய பேர் இருக்கிறார்கள். குழந்தைகளுக்கு யாரும் எழுதுவதில்லை. எனவே நீ குழந்தைகளுக்கு எழுது. அதை வெளியிட ஏற்பாடு செய்கிறேன்" என்று



* பலே பாலு


எனக்கு வேறொரு இலக்கிய உலகத்தின் கதவைத் திறந்து காட்டியவர் மாலி அவர்கள்தான்.

"கோம்பையின் அதிர்ஷ்டம்' என்ற என் கதை விகடன் பாப்பா மலரில் வெளிவந்தது. 'மிருத்யூ' என்று எனக்குப் புனைப் பெயர் வைத்தார் மாலி. ஆனால் வாசன் அவர்கள் "மிருத்யூ' என்றால் யமன். குழந்தைகளுக்கு எழுதும்போது இந்தப் பெயர் வேண்டாம்" என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு மூர்த்தி என்ற பெயரில் பாப்பா மலரில் கதைகள் எழுதினேன். நான் எதிர்பார்த்த வாய்ப்பு இல்லாததால் விகடனிலிருந்து வெளியேற வேண்டி வந்தது.

"அதன்பிறகு திருச்சி திரும்பி 'சிவாஜி' என்ற பத்திரிகையில் பணியாற்றினேன். தொடர்ந்து 'வானவில்' 'கிண்கிணி' என்று குழந்தைகள் பத்திரிகையில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. 'வாண்டு மாமா' உருவானது வானவில் பத்திரிகையில் தான். பின்னர் சென்னைக்கு வந்து சுதந்திரம் என்ற பத்திரிகையில் பணியாற்றினேன். ஆனால் எனது எழுத்துப் பணியில் ஒரு திருப்பு முனை 'கல்கி' நிறுவனத்தில் சேர்ந்ததுதான். எனது பயிற்சிக் கூடமாக அமைந்தது 'கல்கி'தான். பல புதிய சோதனைகளைச் செய்து பார்க்க அங்கே வாய்ப்பு கிடைத்தது. குழந்தைகளுக்காக எழுத வேண்டும் என்ற என் துடிப்புக்கு வடிகாலாக சிறுவர் விருந்து என்ற பகுதி கல்கியில் துவங்கப்பட்டது. மிகப் புதுமையாக வண்ணக் கலவையாக இந்தப் பகுதியைக் குழந்தைகளுக்கு வழங்கினோம். பின்னர் 'கல்கி' நிறுவனம் சார்பாக 'கோகுலம்' குழந்தைப் பத்திரிகை துவங்கியபோது அதை உருவாக்கும் மொத்த பொறுப்பும் என்னிடம் கொடுக்கப்பட்டது. ஐந்து வருட காலம் முழு ஈடுபாட்டுடன் அதில் பணியாற்றி நல்ல அடித்தளத்தை - வாசகர் வட்டத்தை உருவாக்கினேன்.

"என் புகழ் பெற்ற பல சித்திரக் கதைகள் கோகுலத்தில்தான் வெளிவந்தன. கல்கி நிறுவனத்தில் எனது அனுபவம் 23 வருடங்கள். பின்னர் குங்குமம், தினமணிக் கதிர், பூந்தளிர் ஆகிய பத்திரிகைகளிலும் எழுத்துப் பணி தொடர வாய்ப்பு கிடைத்தது. என் வாழ்க்கையில் நான் மறக்க

* வீர விஜயன்



முடியாத இருவர் உண்டு. ஒருவர் குழந்தைகளுக்காக எழுதுமாறு தூண்டிய விகடன் மாலி. மற்றொருவர் என்னை எழுத்தாளனாக இனங்காட்டிக் கொள்ளவும், பத்திரிகையுலகில் நிலையான இடத்தை அமைத்துக் கொள்ளவும் எனக்கு வாய்ப்பளித்து வாழ்வளித்த 'கல்கி' அதிபர் சதாசிவம்.

"எனது பத்திரிகையுலகப் பயணம் என்பது மலர் பாதையல்ல; குண்டும், குழிகளும் நிறைந்த பாதைதான் அது. கொந்தளிக்கும் கடலில் எதிர்நீச்சல் போட்ட அனுபவம் அது. ஆனால் அத்தனை சோதனைகளுக்கிடையிலும் வெள்ளி ஒளிக்கீற்றாகத் தெரிந்தது, குழந்தைகளுக்கு எழுதும்போது எனக்கு கிடைக்கும் சந்தோஷமும் திருப்தியும் தான். எனவே அவர்களுக்கான எழுத்துப் பணி இறக்கும்வரை ஓயாது.

"என்னை ஒரு சிறந்த எழுத்தாளர் என்று சொல்வார்கள். ஆனால் என்னைச் சிறந்த சமையற்காரனாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். சிறந்த சமையல்காரர், ருசியான உணவுக்குத் தரமான மளிகைப் பொருட்களையும், காய்கறிகளையும் தேடிப் பிடித்து வாங்குவார். நானும் அப்படித்தான். நான் படிக்கும் நூல்களிலிருந்து, நல்ல விஷயங்களை, அறிவியல் விஷயங்களை வேறு பல தகவல்களுடன் இணைத்து, குழந்தைகளுக்கு ஏற்றபடி கட்டுரையாகவும், கதையாகவும் கொடுப்பேன். அதில் 'வாண்டு மாமா'வின் முத்திரை தானாகவே வந்துவிடும். குழந்தைகளுக்கு எழுதுவது பெரிய சவால் என்று சொல்ல முடியாது. குழந்தை இலக்கியம் எழுதும்போது, நாமே குழந்தைகளின் எண்ண ஓட்டத்துக்கு மாறி விட வேண்டும். அவர்களின் கற்பனை, புத்திசாலித்தனம், சுட்டித்தனம், பேசும் முறை, அதீத கற்பனை, ஆகியவற்றைப் பயன்படுத்தி கதையைக் குழந்தைகளின் பேச்சு நடையிலேயே எழுதுவது வெற்றிப் பாதையை அடையாளம் காட்டும். நான் எழுதிய சித்திரத் தொடர்கதைகளில் வந்த கேரக்டர்களில் எனக்குப் பிடித்தது (ஏன்? லட்சக்கணக்கான குழந்தைகளுக்கும் கூட) 'பலே' பாலுதான். கோகுலத்தில் வெளிவந்த புகழ்பெற்ற சித்திரத் தொடர்கதை அது. இன்றைய குழந்தைகளுக்கு அறிவியல் விஷயங்களைக் கதை போல சொல்ல வேண்டும் என்பதே என் ஆசை.

"குழந்தைகள் தங்களிடமிருக்கும் எழுத்தார்வத்தை வளர்த்துக் கொள்வது எப்படி? - இப்படி, பல பெற்றோர்கள் என்னிடம் கேட்பதுண்டு. 'உங்கள் குழந்தைகளுக்கு நல்ல புத்தகங்களை வாங்கிக் கொடுத்து அவர்கள் அறிவுப் பசியைத் தூண்டி விடுங்கள். குழந்தைகளும் பள்ளி பாட புத்தகங்களைத் தவிர நேரம் கிடைக்கும் போதெல்லாம் வேறு அரசியல் புத்தகங்கள், உலக விஷயங்களை, விஞ்ஞான முன்னேற்றங்களை நூலகங்களைத் தேடிப் போய் படித்து தெரிந்து கொள்ளவேண்டும்.

"தமிழ்நாட்டில் குழந்தைகளுக்காக நடத்தப்படும் பத்திரிகைகள் மிகக் குறைவு. இந்த வகையில் குழந்தைகளின் அறிவு வளர, அவர்களுக்காக நடத்தப்படும் பத்திரிகைகளின் வளர்ச்சியில் பெற்றோர்களுக்கும் பங்கு உண்டு. அவர்கள் தான் குழந்தைகளுக்குப் பத்திரிகைகள் வாங்கித் தரவேண்டும். பெரியவர்கள் தாங்கள் படிக்கும் பத்திரிகைகளை வாங்கக் காட்டும் ஆர்வத்தை, குழந்தைப் பத்திரிகைகள் வாங்குவதிலும் காட்ட வேண்டும்."


\- ப்ரியன்

படங்கள் : ராஜன்

மனம் மாறியது!

கதை : வி.கமலக்கண்ணி

படம் : பிள்ளை



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05"
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 * Registered as a Newspaper in Srilanka

